[illegible]

O7:4146
N16
147993

265

முபஸ்மிலன்,
யாலதீபு.

OFFICE OF ... REGISTRAR
19 JUL 1916
MADRAS

# பித் அத்தின் விளக்கம்

# தொழுகையினுணுக்கம்.

## உபதேச கண்ணிகள்.

## மரணத்தின் நினைப்பு மோக்ஷத்தின் அழைப்பு.

## வெற்றிலையின் நற்குணங்கள்.

இஃது

கோட்டாறு

பாரம்பரியாய் ஷெய்குமார்களிற் சிறப்புற்றோங்கிய
தெளஹீதுக்கடலாகிய நாயகம் காமில் முகம்மல் ஆஷிகு
ஆபிது ஆரிபுபில்லாஹி செய்யிதினு ஷெய்கு ஜெய்னில்
ஆபிதீனில் காதிரிய்யில் ஜலாலிய்யி ஒலியுல்லா
அவர்களின்

மகமகவாய் வந்த ஹசாத் ஹாஜிஷைய்கு முஹியித்
தீனில் ஆலிமில் காதிரிய்யில் ஜலாலிய்யி சாஹிபு
அவர்களின்

ஜேஷ்டகுமாராகிய

ஆ. செ. மு. ஷெய்கு செய்யிது முஹம்மது ஆலி
மில் காதிரிய்யில் ஜலாலிய்யி சாகிபால்
இயற்றப்பட்டு

சாத்தூர்,

சுப்பிரமணிய விலாசம் பிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

---

ஹிஜ்ரி 1334 ரஜப

சென்னை-600 008
147993

## முக்கிய கவனிப்பு.

---

இப்புஸ்தகத்தை வாசிக்க விரும்பும் கண்யபுண்யவான்களான சகோதரர்களே வல்லநாயன் அல்லாஹு ஜல்லஷானுகுவதஆலா உடைய வேதவாக்கியங்களிலுண்டான ஆயாத்துகளும் நபிகள் நாயகம் ரசூலுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளஞ்செய்த ஹதீதுஷரீபுகளும் மேலாம்பறமாகிய இமாம்களின் காரண சரித்திரங்களும் இதிலடங்கியிருப்பதால் மற்ற புஸ்தகங்களைப்போல் தமிழ் புஸ்தகந்தானேயென்று நினைத்து இலேசாக எண்ணி பேணுதல் குறைவு செய்யாமலும் கீழே வைக்காமலும் இருப்பதோடு இதில் சிலதை வாசித்தும் சிலதை வாசிக்காமலும் பார்த்த பார்த்த மட்டில் விட்டுவிடாமல் முற்றிலும் வாசித்துணர்ந்து பலன் பெறுவீர்களாக.

### வெண்பா.

மார்க்க காவியங்களேதேனுங் கையிலெடுப்பாரானால்
கூர்க்க உணர்ந்தல்லாதுகையகலார்—கல்வியுடையோர்
பார்க்கப் பார்க்க பலன்பெறுவார் பலநூலுணர்ந்தோர்
மூர்க்கத்தை மறக்கடித்துணர்வார் மதியுடையோர்.

இங்ஙனம்,

ஆ. செ. மு. ஷெய்கு செய்யிது முஹம்மது சாஹிப்,
பெருமா குளந்தெரு,
கோட்டாறு, நாகர்கோயில்.

யாலதீபு.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# பித் அத்தின் விளக்கம்

# தொழுகையினுனுக்கம்.

---

அல்லாகுத்த் ஆலாவை புகழ்ந்து நபிகள் நாயகம் ஆல் அஸ்ஹாபு துயர்ந்தவர்கள்மீதுஞ் சலவாத்துஞ் சலாமுஞ் சொன்னபின் சகோதரர்களே அறிவீர்களாக இக்காலத்தில் நூதனமான பித் அத்தாகிய விஷயங்கள் அதிகமாய் நடப்பதால் அதுகளை அறிந்து தவிழ்ந்து கொள்வது முஸ்லிமாகிய ஆண் பெண் அடங்கல் மீதும் விதியாயிருக்கும். ஏனென்றால் நேர்வழி இன்னது வழி கேடு இன்னது பித் அத்தெனும் நூதனம் இன்னது மார்க்கத்திலுள்ளது இன்னது என்று அறிந்தால் மட்டிலும் மார்கத்திலுள்ளதை எடுத்து மற்றதை தவிழ்ந்து கொள்ளலாம்.

காலல்லாகுதஆலா (பதக்கிர் இன்ன பஅதித்திக்ருஸயத்தக்கறுமன்யக்ஷாவயத ஜன்னபுஹல் அஷகல்லதீ எஸ்லன்ஞ றல்குப்ரு) எனது ஹபீபாகிய முஹம்மதே எனது அடிமைகளாகிய உமது உம்மத்துகள் யாபேர்கட்கும் நஸீஹத்து நல்லுபதேசஞ்சொல்லும் அவ்வுபதேசம் அவர்கட்கு பிரயோசனஞ்செய்தாலுஞ்சரி பிரயோசனஞ்செய்யவில்லையானாலுஞ்சரி அச்சம் பயமுள்ளவர்கள் கேட்டு உணர்ச்சிபெறுவார்கள் நரகத்தின் பெரு நெருப்பை சேரும்படியாகிய தோஷித்தனத்தை உடைய மூதேவிகள் அவ்வுபதேசத்தைத்தவிழ்ந்து கொள்வார்களென்று அல்லாகுத்த ஆலாகுறு ஆன் ஷரிபில் திருவுளமாயிருக்கிறான். ஆகையால் முவுமினான பிறவிகளே கீழ்காணும் உபதேசத்தை கவனித்து உணருங்கள். வகாலதஆலா (வஇன்னஹாதாஸிரு தீமுஸ்தகீமன் பத்தபிஊஹு) முஹம்மதே சொல்லும் இந்த தீனுல் இஸ்லாமாகிறது செவ்வொத்த எனது பாதையாயிருக்கும் அதை நீங்கள் துயர்ந்து கொள்ளுங்கள் அதைத்தவிர உண்டான பாதையை துயரவேண்டாமென்று அல்லாகுத்த ஆலா திருவுளஞ்செய்து இருக்கிறான்

இன்னும் (ஹதீது)-பிற்காலத்தில் என்னுடைய உம்மத்துகள் (73) கூட்டமாய் பிரிவார்கள் அதிலொரு கூட்டம் மட்டும் சொர்க்கம் புகுதுவார்கள்மற்றவர்களெல்லாம் நரகம் புகுதுவார்களென்று நபிகள்நாயகம் திருவுளஞ்செய்ததாய் (ஸஹீஹுல்புகாரி) எனுங்கிதாபிலும் இன்னுமந்த பித் அத்துகளென்னும் நூதனமானதை அறிந்து கெட்ட பித் அத்துகளை விட்டுநீங்கிக்கொள்வதற்காய் (கஷ்புல் லுலுமாபீபயானிபர்குஹாதிஹில் உம்மா) எனுங்கிதாபுபோலொத்ததுகளிலும் விரிவாக வருகிற அறபுபாஷையை எழுதி உரை செய்தால் நீளமாகிவிடுமாதலால் அதுகளில் நின்றும் தற்போது தேவையானதுகளின் உரையைமட்டும் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. வகாலதஆலா (குல்ஹல்நுனப்பிவுகும் பில் அக்சரீன அஃமாலன் அல்லதீனலல்ல ஸஃயுஹும் பில்ஹயாத்தித்துன்யா வஹும் யஹ்ஸபூன அன்னஹும் யுஹ்ஸினூன ஸுன்ஆ) எனது ஹபீபாகிய முஹம்மதே அமல்களால் ரெம்பவும் நஷ்டவாளர்களைக்கொண்டு உங்கட்கு அறிவிக்கட்டுமா என்று கேளும் அவர்களாகிறவர்கள் தாங்கள் செய்கிற கருமங்களில் அழகாக செய்கிறோமென்று எண்ணங்கொண்டவர்களாயிருக்கிறஹாலில் இந்த தாழ்ந்த துன்யாவில் அவர்கள் செய்கிற முயற்சை வழிதப்பி பழுதாகி விட்டதே அவர்களாயிருக்குமென்று அல்லாகுத்த ஆலா திருவுளமாயிருக்கிறான்.

ஆகையால் மேற்சொல்லிய கூட்டங்கட்கு அஸ்லாகிறது யேழாயிருக்கும் (1) ரூபிஸிகள் (2) காரிஜுகள் (3) ஜபரிய்யாக்கள் (4) கதரிய்யாக்கள் (5) முஷப்பஹாக்கள் (6) முஅத்தலாக்கள் (7) சுன்னத்து ஜமா அத்துகள் இதில் சுன்னத்துஜமா அத்துகள் மட்டும் சுவர்க்கம் புகுதுவார்கள் இந்த சுன்னத்து ஜமாஅத்தை தவிர மற்ற ஆறு கூட்டத்தில் ஒவ்வொரு கூட்டமும் பன்னிரண்டு பன்னிரண்டாக பிரிந்து மொத்தம் (72) கூட்டமாகிறது இந்த கூட்டங்களுடைய அகீதாவெனும் நிண்ணயமானது நம்முடைய சுன்னத்து ஜமா அத்துடைய அகீதாகட்கு விரோதமாயிருக்கும் இன்னம் நபிசல்லல்லாகு அலைஹிவசல்லம் திருவுளமாயிருக்கிறார்கள் நம்முடைய ஷரீ அத்திலில்லாததை நூதனமாயுண்டாக்கினால் அவன் நம்மில் நின்றுமுள்ளவனல்லவென்று சொல்லியிருப்பதால் நூதனமாயுண்டாக்குவது ஜாயிஸல்ல அதாவது அவர்கள் ஜமானில் நடக்காத கருமங்கள் யாவும் மொத்தமாய் பித் அத்தெனும் நூதனமென்று சொல்லப்படும் அது ஐந்துவிதமாயிருக்கும் அதில் (1) வாஜிபான பித் அத்து (2) முஸ்தஹபபான பித் அத்து (3) ஜாயிஸான பித் அத்து (4) மக்றூஹான பித் அத்து (5) ஹறாமானபித் அத்து ஆனால் இவ்வகையான ஐந்து பித்

அத்துகளில் ஐந்தாவது வகையான பித் அத்தை செய்வது பாவமாகவும் இது கள் நல்ல அமல்கள் இவைகளைச்செய்வதால் அல்லாகுத்தஆலாவுக்கு அல்லது றசூலுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கட்கு அல்லது அவர்களை துயர்ந்த அவலியாகட்கு நல் பொருத்தம் உண்டாகும் இதனால் தவாபு கிடைக்குமென்று எண்ணஞ்சொல்வது குபுருகவுமிருப்பதால் அதையறிந்து தவிழ்ந்துகொள்ளும்பொருட்டு அந்த ஐந்தாவது பித் அத்தை மட்டும் எழுதப்பட்டிருக்கிறது.

அதாகிறது அவுலியாக்கள்பேரால் சந்தனக்கூடென்று எடுக்கிறதும் அதற்காக பணத்தை செலவு செய்கிறதும் தர்காக்களில் தாசிகளை சதிர் முதலான ஆட்டங்கள் பாடல்கள் பாடச்செய்கிறதும் அதுகளை பொருந்துகிறதும் அதற்காக நேர்ச்சை செய்கிறதும் பிள்ளைகட்கு நேர்ச்சையாக குடும்பி வைக்கிறதும் அப்பால் தர்காகட்குப்போய் குடும்பி சிரைக்கவேணுமென்பதும் பிள்ளைகள் பிறந்து பிராயம் எத்தினாலும் காலில் பேடிபோட நேர்ச்சை செய்து அவ்விதஞ்செய்து முடிப்பதும் ஆண் குழந்தைகட்கு காது குத்துகிறதும் ஆணும் பெண்ணும் கூட்டங்கூட்டமாக கூடு பார்க்கப் போகிறதும் இன்னம் குறிகாரர்களிடத்தில் குறிகேட்டு அவன் சொன்னதை நம்புகிறதும்புத்தசான் நசாறாக்களுடைய விக்கிரகம் பஞ்சா இவை போலொத்தவைகள் பிரயோசனஞ்செய்யுமென்று உண்மை கொண்டு அவைகட்கு நேர்கிறதும் அவுலியாக்களே சாகிபுமார்களே என்னுடைய வியாதியை தீர்த்து எனக்கு பிள்ளை தந்தீர்களேயானால் உங்கட்கு சாவல், கிடா, அரிசி, ரூபாய் தருகிறேன் விளக்கு கொடி சந்தனக்கூடு இவை போலொத்தவைகளை செய்துவைக்கிறேனென்று அல்லாகுத்தஆலாவை அன்றி அவுலியாக்கள் வியாதியையும் நாட்டத்தையும் தீர்ப்பார்களென்று நினையங்கொண்டு நேர்கிறதும் புத்து முதலானவைகட்கு ஆடு மாடு வெட்டி பலி கொடுப்பதும் காபிர்கட்கு தை பொங்கல் திருக்கார்த்திகை ஜனவரி, ஆயுதபூசை இவைபோலொத்த விசேஷமான நாட்களில் சங்கையை காடி வெகுமதி கொடுப்பதும் தர்காகட்குப்போய் பேய் ஆடுகிறதும் அதனால் ஜின்ஷெய்த்தான் வெட்டுப்பட்டு போய்விட்டதென்பதும் அதனால் பணம் சம்பாதிக்க லெப்பைமார்கள் மூட்டிவிடுகிறதும் இன்னம் வீட்டில் மனையாட்டி நிற்கிறாளென்றும், செய்யாச்சி நிற்கிறாளென்றும் அதற்காக சாம்பிராணி தூபங்கொடுக்கிறதும் வீடு கப்பல் முதலான வேலைகளை தொடுக்கும்போது காபிர்களுடைய சொல்லைக்கேட்டு தேங்காயுடைத்து மஞ்சள் சந்தனம் சாம்பிராணி, புஷ்பம், போல் கொத்ததுபோடுகிறதும் ஹறாமான பித்அத்தாயிருக்கும்.

இன்னம் நோம்புபோல்கொத்த வணக்கங்கள் யாவும் அல்லாகுத் ஆலாவுக்காகவே செய்யவேண்டியதிருக்க முஹர்ராமாசம் வந்தால் இமாம் ஹுஸைன்றலியல்லாகு அன்கு அவர்களைக்கொண்டு நோம்பு பிடிக்கிறதும் வேஷம் போடுகிறதும் பஞ்சா வைக்கிறதும் நெருப்பு குழியில் பாய்கிறதும் இன்னம் வெள்ளிக்கிழமை திங்கட்கிழமை இரவில் தர்காக்களில் போய் ஆணும் பெண்ணும் இத்தனை கிழமைக்கு இராத்தரிப்பேனென்று நேர்ச்சை செய்து அவ்விதம் போய் தரிப்பதும் இதுவெல்லாம் ஹறுமான பித் அத்தாயிருக்கும் ஸுபுஹானல்லா பார்க்கவில்லையா அவுலியாக்கள் ஹறுமான கருமங்களைக்கொண்டு அவர்களுடைய ஹால்ஹயாத்திலும் வபாத்திலும் பொருந்தார்கள் அப்படியிருக்க மனத்தீரமாக அவர்கள் முன்பாகநின்று கேலியான ஆடலையும் பாடலையும் சங்கீத ரசங்களையும் கேட்டுக்கொண்டு ஹறுமான பார்வைகளையும் பார்த்துக்கொண்டு எத்தனையோ பர்லான தொழுகை முதலிய அமல்களையெல்லாம் விட்டொழிந்து ஹயாஇல்லாதவர்களாக அந்த மேலான சமுகத்தில் சங்கையில்லாமல் ஆணும் பெண்ணும் படுத்துக்கொள்கிறதுந்தவிர இந்த துர்நடத்தைகளைக் கொண்டெல்லாம் பின் கியாமத்தில் அல்லாகுத்த ஆலாவுடைய சமுகத்தில் அவர்களின்பேரில் அந்த அவுலியாக்களை சாட்சியாக்கிக்கொள்கிற தீமைக்கு யேது சொல்லலாம் இன்னும் தர்காக்களின் அருகான்மையாய் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களில் சங்கைக்காய் காலின் செருப்பு ஜூத்தா பாப்பூசை கழற்றி நடக்கும் மனிதர்கள். மேற்கண்ட மலைபோலொத்த பாவங்களை அத்தலத்தில் செய்துமுடிக்க நாணுதிருக்கின்ற மதியீனர்கட்கு நாம் யேது சொல்லலாம்.

இன்னம் ஆஷுறுபத்துநாளும் பித் அத்துகள் அநேகம் நடக்கிறது அதாவது பலவிதமான வேஷங்கள் போடுகிறதும் கையில் வர்ணமுள்ள துணியை கட்டிக்கொள்கிறதும் இமாம்ஹுஸைன்றலியல்லாகு அன்கு ஷஹீதாகும்போது ஒரு கையை உயர்த்தி காட்டினார்களென்பதை எமுகஞ்சொல்லி பஞ்சா வைக்கிறதும் இமாம்ஹுஸைனை உகந்தவர்களென்று பாவித்து அவர்களுடைய ஷஹாதத்தின் வரலாறை சொல்லி மார்பிலடித்துக்கொண்டு ஒப்பாரி சொல்கிறதும் கறுத்த உடுப்புகளை அணைகிறதும் பூக்குழி என்று பெயர் சொல்லி கிடங்கு தோண்டி நெருப்பை மூட்டி அக்கிடங்கை தாண்டுகிறதும்யாஹுஸைன் என்று கூவி குளறிக்குளறி அலைவதும் சாம்பல் கரிகளை பூசிக்கொள்கிறதும் இதுவெல்லாம் ஹறுமான பித் அத்தாயிருக்கும் வகாலதஆலா (வமினன்னாஸி மன்யஷ்தரீ லஹ்வல்ஹதீதி லியுளில்ல அன்ஸபீலில்லாஹிபிகைரி இல்மின் வயத்தகி

தஹா ஹா ஸஹா உவாயிக லஹும் அதாபுன் முஹீன்) இதின் பொருள் அல்லாகுத்தஆலா உடைய மார்க்கப்பாதையை விட்டும் வழிகெட்டு அம் மார்க்கப்பாதையை கேலி பரியாஸமாக எடுத்துக்கொள்கிறதற்காக வீண் இராக விளையாட்டு தமாஷா சாமான்களை அறிவில்லாமல் வாங்குகிறவா கள் மனுஷர்களில் நின்றுமுள்ளவர்களாகயிருக்கும் அவர்களாகிறவர்கள் அவர்கட்குதான் தளுமையான அதாபு உண்டாயிருக்கிறது அவர்கள்பேரில் நமது ஆயாத்துகளை ஓதப்படுமேயாகில் இரண்டுகாதிலுங்கனத்த செகுடு இருக்குமாப்போல் அவ்வாயாத்து நல்லுபதேசத்தை கேளாது பெருமை அடித்தவர்களாக பின்வாங்கி விடுவார்கள் ஆனபோதே எனது ஹபீபாகிய முஹம்மதே ரொம்பலம் வருத்தும் அதாபைக்கொண்டு அவர்கட்கு நீர் அச்சமூட்டி நல்மாராயஞ்சொல்லுமென்று அல்லாகுத்தஆலா திருவுளமா யிருக்கிருன்.

இன்னும் நபிகள் நாயகத்தின் ஹதீதாவது கடாசி காலத்தில் என் உம்மத்தில் சில மனிதர்களை குரங்கு பன்றிகளின் கோலமாக மாற்றப்படு வார்களென்று றசூலுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லந்திருவுளஞ்செய் தார்கள் அப்போது அல்லாஉடைய றசூலே அவர்கள் உங்களையும் அல்லா குத்தஆலாவையும் உண்மைபடுத்தி ஈமாங்கொண்டுகலிமாஸஹாதத்து சொ ல்லவில்லையாயென்று சஹாபாக்கள் கேட்டபோது ஆம்ஈமான்கொண்டு கலிமாஸஹாதத்துச்சொல்வார்கள் எண்கிலும்வீண் இராகவிளையாட்டுகிண் ணற சங்கிர் தராகம் கொட்டு முதலியவைகளை தங்கீகஞ்செய்து அவை களைக்கொண்டு அவர்கள் வீண் விளையாட்டு தமாஷாக்களின்பேரில் இரா த்தரிப்பார்களப்போது அவர்கள் குரங்கு பன்றிகளின் கோலமாக மாத்தப் பட்டு விடிவேருவார்கள் என்று றசூலுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லந்தி ருவுளமானுர்களென்றும் இன்னுஞ்சில மனிதர்கள். கள் சாராயங்கள் இவை களுக்கு வேறுபேர்களைவைத்து அவைகளை குடிப்பார்கள் அவ்விராகம் மே ளதாள தமாஷாக்களையும் நடத்துவார்கள் அவர்களைக்கொண்டு அல்லாகுத்த ஆலா கியாம நாளில் சொரியவாங்கும்படி செய்வான் அவர்களில் சிலதை குரங்கு பன்றிகளின் கோலமாக மாற்றிப்போடுவானென்றும் இன்னும் அ வ்விராக தமாசாமஜ்லிஸிலிருந்து அவ்விராகங்களை கேள்ப்பவர்களின் இர ண்டு காதிலும் ஈயத்தை உருக்கி ஊத்தப்படுமென்றும் அச்சமூட்டி றசூ லுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லந்திருவுளமானுர்களென்று (முர்ஷிதித் துல்லாபு)என்ற கிதாபில் வருகிறது இன்னும் அதன்ரித்தத்து உடைய பா பில் அவ்வீண்இராகவிளையாட்டு சாமான்கள் ஹறுமல்லவென்று அல்லது அதைகேழ்ப்பது ஓர் வணக்கமென்று நிண்ணயங்கொண்டவன் மார்க்க த்தை விட்டு நீங்கி முர்தத்தாகி விடுவானென்றும் வருகிறது இன்னம் அதபுமாலையில் காமில் ஒலியுல்லா சொல்வதையுங் கவனியுங்கள்.

## தொங்கல்.

முன்னொரு ஊரின் காடுதன்னில்மூடி வெளியான சிலகப்றில்
கன்னசுகுடிகொண்டு நின்று காட்சி காட்டிடவது தனையே
பின்னர் சிலபேர்கள் அறியாமலே மிரண்டுபோயோடிமார்கையேந்தி
இன்னாள் நசல்தீர்த்துபிள்ளை தந்தால் இன்னபடி தந்துவாறோமென்றாள்

ஆண்டவன் அவள் நசலுந்தீர்த்து அவள் தன் புருஷனை அடுக்கச்செய்து
வேண்டும் பிள்ளை தாங்கொடுக்கிறது விதியிலுண்டானால் பதியில் வரும்
நீண்ட பெரியவங்கொடுத்ததன்றிநேர்ந்த கபுரினால் பலனில்லையே [தே
தோன்றுமிஸ்வாமிலுள்ள பெண்கள்தொல்லை கபறிடஞ்செல்லொண்ணா

இத்தப்படியே தான் நடக்கிறதை இலப்பைமார்களுந்தலைவர் யாரும்
எந்தபடியாலும் நமக்கு கொஞ்சம் இரணம் வருவது வரட்டுமென்று
குண்டமாகவே கூடிக்கொண்டு குத்தங்குறைகண்டால் விலக்காமலே உ
பிந்திபடும்பாடு ஆகிறத்தில் பெரியோனறிவானென்றறிவோர் சொன்னார்

உறட்டி பாச்சோறு இறச்சிக்காக ஊரின் பெண்களை வரவழைத்து
பிரட்டி அறிவெல்லாம் மறைத்துப்போட்டுபெருநாளாகவேதிருநாளாக்கி
குருட்டு இபுலீசுகலைவினாலே குற்றமிகவாக செய்தபேர்கள்
இருட்டு நரகத்தில் குருடாகவே இடறி விழுவாரென்றறிவோர்சொன்னார்

வடிவுமிக உள்ளமடவார்கள் தான் வாலிபக்காரர் பலருங்கூடி
கொடிகள் கூடுகள் வேடிக்கையாய் கோயில்தலம்போலே மேளதாளம்
கொடிய இபுலீசுகலைவினாலே கூத்துப்பார்க்கின்ற ஆணும் பெண்ணும்
நெடியோன் நபியுடஷறஹைவிட்டும் நீதிகெட்டதோர் பாவியாவார்

படித்த அறிவதை வெளியாக்காத பழிகாற ஆலிமவர்களைத்தான்
துடிக்ககியாமத்து நாள் தனிலே துய்யோன்யேவலால் பிடித்திழுத்து
கொடுத்த அறிவதை சொன்னபடி சொடாமல் கொடுவந்தீரென்றுசொல்லி
அடுக்க நெருக்கியே நரகத்திலே அதாபுபடுத்துவாரென்று சொன்னார்

ஹதீது (லஅனல்லாஹு ஸாயிருத்தில் குபூரி வல்முத்தகிதீன அலைஹல் மஸாஜித வஸ்ஸிருஜ) அல்லாகுத்தஆலாவின் லகுனத்தாகிறது கபுறுகளை சியாரத்துச்செய்கிற பெண்பிள்ளைகளின்பேரிலும் கபுறின்பேரில் விளக்கையும் பள்ளிகளையுமாக்கிக்கொள்ளுகிற மனிதர்கள்பேரிலுமாகவிருக்குமென்று நபிகள் பெருமான் றசூலுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லந் திருவுளஞ்செய்து இருப்பதால் கபுறுகளை சியாரத்துச்செய்கிறது ஆண் பிள்ளைகளுக்கு சுன்னத்தாகவும் பெண் பிள்ளைகளுக்கு விலக்காகவுமிருக்கிறது. ஆனால் இக்காலத்தில் சில பெண்பிள்ளைகள் தங்கள் குறைவுகளை நிவர்த்திசெய்துகொள்ள நாடி கபுறுகளை சியாரத்துச்செய்யவேணுமென்று புருஷர்கட்கு பலவிதமாகச்சொல்லி தலையணையந்திரமோதி அவர்களை அம்மந்திரத்திலகப்படுத்தி சிலர் புருஷர்களுடனும் சிலர்புருஷரில்லாமலும் நகைகளையும் அலங்காரமான உடுப்புகளையும் அணைந்து சிங்காரித்துக்கொண்டு இந்துக்கள் கூட்டங்கூட்டமாய் கோவில்களுக்குப்போய் அக்கோவிலைச்சுற்றிவந்து கீழே விழுந்து சாஷ்டாங்கம்செய்து உக்கிபோட்டு வாயிலடித்து புத்தகளிருக்குஞ்சுவர்களையும் படிகளையுந்தொட்டு முத்துவதுபோல் இவர்களும் இஸ்லாமென்ற கோலம்பூண்டு கூட்டங்கூட்டமாக தற்காகளுக்குப் போய் தற்காவைச்சுற்றி அவ்விடத்தில் அவுலியாக்கள் தொழுகையென்று தொழுகிறதும் வாயிலடித்து உக்கியெனும் தோப்புகர்ணம் போட்டு கபுறையும் சுவர்களையும் வாசல்படிகளையும் தொட்டுமுத்துகிறதும் அவுலியாக்களின் யோக அப்பியாசமென்று சொல்லி கிறிஸ்துவ பெண்கள் கோயிலிலுட்கார்வதுபோல் முழங்கால் படிபோட்டு அவ்விடத்திய லெப்பை அல்லது மோதின் முன்னிலையிலுட்கார்ந்து கையேந்துகிறதும் இதுவெல்லாம் ஹறாமான பித் அத்தாகவும் குபுறாகவுமிருக்கும். ஆகையால் ஒவ்வொரு முஸ்லிமான உடற்பிறப்புகளும் இவைகளையெல்லாமறிந்து அல்லா றசூல் அவுலியாக்கள் யாரும் பொருந்தாத சொற்செயல் நிணயங்களைவிட்டு சார்மானம்பெற்று பிள்ளைகளையும் பெண்களையும் துற்செயல் துற்குணங்களைவிட்டு விலக்கி நல்லொழுக்கங்களை வறுத்துவார்களென்று ஆதரவு வைத்து எழுதப்பட்டிருக்கிறது பார்த்துணர்ந்து பலன் பெறுவீர்களாக. ஆமீன்.

---

பித் அத்தின் விளக்கம் முற்றிற்று.

---

## இனி

இஸ்லாமார்க்கத்தின் இரண்டாவது எடுப்பாகிய தொழுகையாகிறது சால வணக்கத்திலும் யேற்றமாகவும் தீனுக்கு அடி மூடாகவும் இஸ்லாமின் அருட்சியை வெளிகாணத்தருகிறதாயும் வெளிரங்கமான வணக்கத்தையும் உள்ரங்கமான வணக்கத்தையும் பொதிந்ததாகவும் சொல்லால் செயலால் நினைவால் இம்மூன்று விதமான வணக்கத்தை பொதிந்ததாயும் இஸ்லாமைக்குப்ரைவிட்டு பிரிக்கிறதாயும் மூமின்கட்கு மிகுறூஜாகவும் அல்லாகுத்தஆலாவைப் பொருத்தமாக்கி வைக்கிறதாயும் விருக்ஷாதிகளின் வணக்கமான நிலையும் மிருகங்களின் வணக்கமான ருக்கூஉம பறவைகளின் வணக்கமான இஹ்றிதாலும் மலக்குகளின் வணக்கமான ஸுஜூதும் மலைகளின் வணக்கமான இருப்பும் ஊர்வன பரவன புளு பூச்சிகளின் வணக்கமான தஸ்பீஹு தக்பீறு தஹ்லீலு தஹ்மீதைப் பொதிந்ததாயும் அல்லாகுத்தஆலா நன்கொடை செய்யும் அத்தஹிய்யாத்து ஸலவாத்து சலாமை பொதிந்ததாயும் அன்பியாக்கள் அவுலியாக்கள் கொண்டாடிய வணக்கமாயும் குறுஆனில் முப்பத்திமூன்று தானத்தில் அந்த தொழுகையை நிலைபாடாக்கும்படி கண்டித்து யேவிய வணக்கமாயும். இன்னுஞ்சொல்லமுடியாத அசமியங்களையும் பொதிந்தது தொழுகையேயல்லாது வேறில்லை.

பிறவிகளே சற்று கவனியுங்கள் இந்த ஐந்து வக்து தொழுகையைவிட்ட ஒருவர் ஆகாயத்திலிருந்து பூமியிலிறங்கி நடக்கும்போது அவர் காலடிபட்ட தலங்களிலிருந்து அநேக கபுறுகளிலுள்ள மய்யித்துகளெல்லாம் எழும்பி அவரை நோக்கி அஸ்ஸலாமு அலைக்கயாவலியுல்லா என்று அதபு ஒழுக்கத்துடன் சலாஞ்சொல்லியபின் கப்றளவில் மீண்டுவிடவும் இன்னமநேக குருடர் செவிடர் நொண்டி முடவர் சகலரும் அவரிடம் வந்து சுகத்தை பெறவும் நெருப்பை தண்ணீர் போலாக்கவும் இன்னும் அநேக மறைவான செய்திகளை அறிவித்து அவர் சொன்னபடி முன் பின்னில்லாமல் நடந்தேற கண்டிருந்தாலும் அப்பால் மத்தியானந்தொடுத்து அஸ்தமிக்கிறவரையில் அவரை நீ பிரியாமல் கூடவேயிருந்து வக்த்தானபின் லுஹறையும் அசறையும் அவர் தொழாமலிருந்தால் அஸ்தமித்தவுடன் அவர் தொழுகையை விட்டதற்காக அவர்பேரில் நீ ஹத்தை நடத்தாட்ட யேலுமாகில் நடத்து இல்லாவிட்டால் அவரைப்பார்த்து தொழுகையைவிட்ட இந்த ஷெய்தானைவிட்டும் அல்லாகுத்தஆலாவைக்கொண்டு காவல்பாடு தேடுகிறேன் என்று சொல்லி நீங்கிக்கொள். அவ்விதஞ்சொல்லும்போது உன்னைப்பார்த்து ஒருவன் அடா

மடையா இப்படிக்கொத்த ஒலியுல்லாவை ஊவு தாங்காமல் அவரை தெய்தானென்று அவரைவிட்டும் காவல் தேடுகிறுயாவென்றும் அவர் அல்லாஉடைய ஒலியாகஇராவிட்டால் இந்த கருமத்து நடக்குமாவென்று ஒருவன் சொல்வானுகில் அப்படிச்சொன்னவனை கொல்வது 100 காபிறைக் கொல்வதைக்காண தவாபில் யேத்தமாயிருக்குமென்று இமாமுல் முஸ்லிமீன் செய்யி துல்முலன்னிபீன் (கஸ்ஸாலி) இமாமவர்களும் கல்லுடைந்தாலுஞ் சொல்லுடையாத (இபுனுஹஜர்) றஃமத்துல்லாஹி அலைஹிமா இருவர்களும் பத்வா செய்து இவருக்கு எழுகமாய் எவ்விடத்திலும் ஆஜருகும்படியான இபுலீசையும் ரிஷ்பத்தை பேசும்படி செய்த சாமிரிய்யி என்கிற தட்டானையும் ஹதீதுதலிலுடன் அத்தாட்சி கொடுத்திருக்கிறுர்கள்.

இன்னுஞ்சிலர் தொழுகை ஷரீஅத்திற்காகயிருக்கும் நாங்கள் மகுரிபா உடையவர்கள் எங்களுடைய தொழுகை ஷரீஅத்தை உடையவர்கட்கு தெரியவராது எங்களின் தொழுகை ரகசியமாயிருக்கும் வெளிரங்கமான இந்த தொழுகையில் சிலாக்கியமில்லை என்று இக்காலத்தில் சில மூடர் சொல்வது உண்டு இவ்விதம் சொல்வதெல்லாம குப்ருயிருக்கும்.

ஏனென்ருல் தொழுகையை மனமுறண்டாக அல்லது அதை விடுகிறது ஹலால் என்றெண்ணி தொழாமலிருப்பது குபிருயிருக்குமென்று நபிகள் பிரான் றசூலுல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லம் ஆக்ஞாபித்திருப்பதுமன்னியில், (குல்லுஹகீகத்தின்லம் தஷ்ஹது லஹஷ்ஷரீஅத்து பஹுய ஜந்தகத்துன்) ஒவ்வொரு அந்தரங்கமான வார்த்தையடங்கலையும் ஷரீஅத்தென்னும் மார்க்கம் அதை சரிகண்டு சாட்சியாகவில்லையானுல் அது ஸந்தகதெனும் குபுருயிருக்குமென்று முகியித்தீன் அப்துல்காதர் ஜீலானிய்யி தலியல்லாகு அன்கு (பத்ஹுர்றப்பானிய்யி) எனுங்கிதாபில் தீர்மானித்திருக்கிருர்கள்.

## தொங்கல்.

சரீரம்நபுஸுதான் பசுவைப்போலாம் ஷறஹின் அமலதின்பாலைப்போலாம்
தரீகத்து பாலைகாச்சி பேணி தைரில் வெண்ணை நெய் எடுக்கல்போலாம்
மருவும்ஹகீகத்துவெண்ணைபோலாம் மகிள்ந்தமஃரிபா நெய்யதுபோல்
ஷறபாம்பாலன்றி நெய்யில்லாப்போல் ஷறஅன்றி இற்பானில்லையே

வகாலதஆலா (இன்னஸ்ஸலாத தன்ஹா அனில்பஹ்ஷாயி வல்முன்கரி வலதிக்றுல்லாஹி அக்பர்) தொழுகையானது ஷறஹில் விலக்கப்பட்ட கெடுதிகளைவிட்டும் பொருத்தக்குறைவான கருமங்களை விட்டும் தொழு

கிறவனை திட்டமாக விலக்கிதப்புரவாக்கும் இந்தசுத்தமான (ஹாலத்திலே) அல்லாகுத்த ஆலாவை அவன் திக்றுசெய்கிறது ரெம்ப பெரிதாயிருக்கும் அல்லது தொழுகிறவனை தொழுகிற நேரத்தில் அல்லாதிக்று செய்கிறது ரெம்ப பெரிதாயிருக்குமென்று அல்லாகுத்தஆலா திருவுளமாயிருக்கிறான் யேனென்றால் ஹதீதில் வந்திருக்கிறது தொழுகிறவன் (பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்) என்று சொல்லும்போது என் அடிமை என்னை திக்று செய்கிறானென்று அல்லா சொல்கிறான் (அல்ஹம்துலில்லாஹிறப்பில் ஆலமீன்) என்று சொல்லும்போது என் அடிமை என்னை புகழ்கிறானென்று அல்லா சொல்கிறான் (அர்ரஃமானிர்ரஹீம்) என்று சொல்லும்போது என் அடிமை என் பேரில் துதிகூறுகிறானென்று அல்லா சொல்கிறான் (மாலிகியெளமித்தீனி) என்று சொல்லும்போது என் அடிமை என்னை வலுப்பமாக்கி வைத்து என் அளவில் பரஞ்சாட்டுகிறானென்று அல்லா சொல்கிறான் (இய்யாக நக்புது வயிய்யாக நஸ்தஹீனு) என்று சொல்லும் போது இது எனக்கும் என் அடிமைக்கும் பொதுவானதாயிருக்கும் என் அடிமை என்னிடங்கேட்டது அவனுக்கு உண்டாயிருக்கிறது என்று அல்லா சொல்கிறான் (இக்திநஸ்ஸிறுதல் முஸ்தகீம சிறுதல்லதீன அன்அம்த அலைஹிம் கைரில்மக்லூபி அலைஹிம் வலல்லா அல்லீன்) என்று சொல்லும்போது இவைகள் என் அடிமைக்கு சொந்தமானதுகளாயிருக்கும் என் அடிமை என்னிடங்கேட்டது அவனுக்கு உண்டாயிருக்கிறது என்று அல்லா சொல்கிறான்.

இன்னும் முஹியத்தீனிபுனு அறபிறலியல்லாகு அன்கு தங்களுடைய (அஷ்ஷெய்குல் அக்பறு) எனும் தப்சீறுகிதாபில் மேல்கூறிய ஆயத்தின்மஃனாவில் ஸலாத்தென்கிற மொழிக்கு (7) மகாமின்படி (7) மஃனாக்களையும் அதின் குணம் நடப்பு ஒழுங்குகளையும் வபரித்து பதனியத்தாகிய ஜடளத்தளவில் சேர்க்கப்பட்ட இந்த தொழுகை உடல் மௌத்தாகிறதுகொண்டேயல்லாது விளமாட்டாது உடலில் றூஹு இருக்கும்வரையில் தொழவேணுமென்று தீர்மானித்திருக்கிறார்கள் இதற்கிணங்கியே அதபுமாலையில் காமில் ஒலியுல்லா சொல்லி இருப்பதையுங்கவனியுங்கள்.

## தொங்கல்.

ஈமாந்தனைக்கொண்டு மிஸ்லாங்கொண்டு மிருக்கும் பறுலுகளிறுக்காமலே சீமான் விலக்கிய பாவங்களை தெரிந்து விலக்காமலுலகத்திலே

நாமமில்லாமெண்டிருப்போர்கள்தான் நாளை கியாமத்துநாள்தனிலே
கோமான் வஹ்னத்தால் நபிமுனிவால் கொடிய நரகத்தில் மடிய வீள்வார்

இஸ்லாமார்க்கத்தின்கோலங்கொண்டு எல்லா அமல்களைச்செய்வாரைப்போல்
அசலாரறியவே அவரவர்க்கே அறபுபாஷையால்பேரும் வைத்து
நலலாங்காபிர்கள் செயலாகவே நாட்டினபடி பாவஞ்செய்தோர்
பிசலாமௌத்துவந்தடுக்கும்போதுபேணுந்தோணியை கவிள்த்தோராவார்

நானூற்றி சின்னந்தலங்களிலே நலமாந்தொழுகையின்கருமமாக [ருன்
கோனேற்றமானோன் குருன்தனிலே குணமாய்வணங்கதான்வேணுமென
நீ நூறுவயதிருந்தபோதும் நிலத்தில் விளமட்டுந்தொளவே வேணும்
நூல் நூத்ததுபோல் நூக்கவேண்டும் நோம்புந்தொழுகையுமாண்பெண்ணுக்கே

இன்னும் எந்த முர்சலான நபிமார்களுடைய மார்க்கமும் தொழுகையில்லாமல் யேற்படவில்லை இதற்காகத்தான் சங்கையானகுறுஆன்ஷரீபு (சூரத்துறூமல்) நாளொன்றுக்கு ஐந்து நேரந்தொழும்படி ஆயத்து வந்திருக்கிறது அதாவது மனிதர்களே நீங்கள் (ஸுப்ஹிலும், ழுஹரிலும் அஸரிலும், மக்ரிபிலும், இஷாவிலும்) அல்லாகுத்தஆலாவை தொழுங்கள். அவனைவானுலகரும் பூவுலகரும் புகள்கிறார்கள் அவனை வணங்கும்படி அவன் உங்கட்கு நல்லுதவிசெய்தது ஒரு ஹுகுமத்தாயிருப்பதால் அதன்பேரில் அவனை புகள்வது வேண்டுமென்றனுட்பமிருக்கிறதென்று (ஹாஷியத்துஸ்ஸாவி அலல்ஜலாலைனி) என்ற கிதாபில் வருகிறது.

ஆனால் ஐந்து வக்து தொழுகை நபி நாயகத்தை தவிரவேறே எந்த நபிமார்கட்கும் யேற்படவில்லை நபிநாயகம் அவர்கட்கே சொந்தமாய் பாங்கு இகாமத்தைக்கொண்டும் தொழுகையின் துவக்கத்தில் தக்பீறைக்கொண்டும் பாத்திஹாவின் கடாசியில் ஆமீனைக்கொண்டும் கறுஅத்து முடிந்தவுடன் றுகூஉவைக்கொண்டும் றுகூஉவைவிட்டு நிமிரும்போது றப்பனாவலகல்ஹம்து இவைகளைக்கொண்டும் தொழுகையில் பேச்சு ஹறாமாயிருப்பதைக்கொண்டும் எந்த நபிமார்கட்கும் இப்பிரகாரந்தொழும்படி யேற்படவில்லை இவ்விஷயங்களோடு தொழும்படி நபிநாயகமவர்கட்கும் அவர்களுடைய உம்மத்துகட்குஞ் சொந்தமாக்கப்பட்டது என்று (உனமூதஜ்) என்ற கிதாபில் ஸுயூத்தி இமாமுஞ்சொல்லியிருக்கிறார்கள் இன்னம் (ஷரீஅத்து) ஜுடலத்தைக்கொண்டும் (தரீகத்து) கல்பைக்கொண்டும் (ஹகீகத்து)

நாவைக்கொண்டும் (மக்ரிபத்து) சிர்ரைக்கொண்டுங்கொளுகி நீற்குமெ ன்றதாக (மிப்தாஹுஸ்ஸலாது) எனுங்கிதாபில் வருகிறது.

வகாலதஆலா (யா அய்யுஹல்லதீன ஆமனுத்குறுல்லாஹ திக்றன் கதீரு) மனிதர்களே அல்லாகுத ஆலாவை மிகுதமாக திக்று செய்யுங்களென்று அல்லாகுத்த ஆலாகுறு ஆன்ஷரீபில் திருவுளஞ்செய்தான் இனி திக்ெ ன்ற சொல்லுக்கு பொருள் ஞாபகஞ்செய்வது சொல்வது வாழ்த்துவது முதலான பொருளுண்டும் ஆனல் அல்லாகுத்த ஆலாவை திக்று செய்வதா வது சிலவேளை நாவைக்கொண்டுஞ் சிலவேளை கல்பைக்கொண்டுஞ் சில வேளை ஒவ்வொரு உறுப்புகளைக்கொண்டுமாயிருக்கும் அல்லாகுத்தஆலா வை நாவைக்கொண்டு திக்று செய்கிறது எப்படியென்றால் அவனை புகழ் கிறதும் தஸ்பீஹு, தக்பீறைக்கொண்டு துதிக்கிறதும் அவன் வேதத்தை ஓதுகிறதுமாயிருக்கும். கல்பைக்கொண்டு அவனை திக்று செய்கிறது எப் படியென்றால் அல்லாகுத்த ஆலாவின் தாத்து சிபத்துகளின்பேரில் அறி விக்கின்ற அத்தாட்சிகளில் ஆலோசிக்கிறதும் அவன் யேவல் விலக்கல் முதலான ஹுகும்களின் விதத்தின்பேரில் அறிவிக்கின்றஅத்தாட்சிகளில் ஆலோசிக்கிறதும் அவனுடைய படைப்புகளின் ஸிர்ருகளில் ஆலோசித்து யோசிக்கிறதுமாயிருக்கும் ஒருவன் மக்லூகாத்தெனும் படைப்புகளின் அணுக்களில் நின்றும் ஒவ்வொரு அணுவடங்கலும் ஆலமுல் குதுசுக்கு ஒத்துமையான தெளிவாகிய கண்ணடியை போலாகிற மட்டுக்கும் மக்லூ காத்தளவில் கோட்டமிட்டால் ஆலமுல்ஜலாலனவில் அவன் பார்வை செல் லும் அப்படியே அந்த மகாமுக்கு நிர்ச்சையில்லை. அவயார்கள் உறுப்புக ளைக்கொண்டு திக்றுசெய்வது எப்படியென்றால் யேவப்பட்ட அமல்களில் அவன் உறுப்புகள் மூள்கினதாகவும் விலக்கப்பட்ட வேலைகளைவிட்டும் நீங்கிக்கொள்வதாம். இதற்காகத்தான் இமாம்அபூஹனீபாறகமத்துல்லாஹி அலைஹி அவர்களும் முஹிய்யத்தீன் அப்துல் காதரில் ஜீலானிய்யிறலியல் லாகு அன்கு அவர்களும் அவர்கள்போலொத்தவர்களும் ஙாளொன்றுக்கு (500), (1000) றகஅத்துதொழுது வந்து இருக்கிறார்கள்.

பின்னர்—ஓய்வன்றி திக்றை நேமமாய் செய்கிறதால் மிகுந்தவேளை யில் அவன் கல்பு திக்றைக்கொண்டு மொளிகிற சப்தத்தை அவன் செ வியால் கேள்ப்பான் தவிரவும் அவனுடைய திரேகமடங்கலும் ஒவ்வொரு உறுபபுகளடங்கலும் திக்றைக்கொண்டு மொளிகிறதையும் கற்கறடு புற் பூண்டு சகல உயிர் பிராணிகள் அடங்கலும் அல்லாகுத்தஆலாவைதிக்று

செய்கிறதையும் கேள்ப்பான் இவனுடைய திரேகத்திலுள்ள உறுப்புகள் திக்று செய்தால் சிலவேளை அவன் கல்புதானயிருக்கும் சிலகால் இந்த மனிதன் செய்த திக்றில் நின்றும் உண்டாக்கப்பட்ட மலக்காயிருக்கும் சிலகால் அவளைப் பூண்டுகொண்டிருக்கிற றூஹாயிருக்குமென்று ஷெய்கு அப்துல்வஹ்ஹாபுஷ்ஷஅருனிய்யி தங்கள் (மவாஹின்) எனுங்கிதாபில் சொல்லுகிறதாக (யன்ஹஜ-ல்கவி) ரண்டாம்பாகம் (142)வது பக்கத்தில் வருகிறது இதற்காகத்தான் செய்யிதிஞமஸதான் சாகிபு அவர்களுஞ் சொல்லியிருர்கள்.

## சரணங்கள்.

என்னவிதமென்று சொல்வேன் முழக்க
முழங்குவதென்னுக்குள் ளாலே—ஒரு
அன்னமிருந்தேயழகுபிறச்ச
அசைந்தசைந்தாடுவ தாலே—அதன்
முன்னாலே யான் செய்த பாக்கியங்கொண்டு
மூன்றுசையில்லாத தாலே—அது
தன்னாலேஆனந்தவெள்ளம் பெருகித்
தடையறப்பாயுத லாலே—டயிர்
அன்னம்பிடித்தது ளூலே—உனக்
கென்னகுறைலாயிலாக இல்லல்லா
ஹ-வென்றென்னை மறந்து கொண்டிருப்பாய் நெஞ்சமே.

இனிதரீகத்துடைய தொளுகைக்கு மஸ்ஜிது கல்பு அதற்குஜமா அத்து பாத்திஹுடைய நாவால் தௌஹீதின் நாமங்களைக்கொண்டு நோக்கம் வைக்கிறதின்பேரில் பாத்திஹைசேர்ந்த குவ்வத்துகள் ஒன்று படுவதாம் அதற்கு இமாம் புஆது எனும் இருதயத்திலுள்ள ஷௌகெனும் பேரானந்தம் அதற்கு கிப்லா அஹதியத்தின் ஹலறத்தும் சமதியத்தும் ஜமாலுமாம் இதுதான் கிப்லத்துல் ஹகீக (கல்புக்கு) உதக்கமும் மௌத்துமில்லாமல் தூக்கத்திலும் முளிப்பிலும் கல்புடைய ஹயாத்தைக்கொண்டு வெளி உறுப்பு அசையாமல் எப்போழுதுந் தொழுகையில் றூஹ-ம் கல்பும் பிரவேசித்துக் கொண்டே இருக்கும் இவ்வித தொளுகையுள்ளவர்கட்கும் வெளிரங்கமான உறுப்பசைவது கொண்டுள்ள ஷரீஅத்துடைய ஐந்து நேரத்து தொளுகையினமாட்டாது இதற்காகத்தான் ஆரிபீன்களுடைய பாடலிலும் வந்திருக்கிறது.

## தொங்கல்

தொழுகையில்லாற்கு ஷபாஅத்தில்லை, சொல்மாசலைகளும் பீஸகரில்
வீழ்வார்ஷபாஅத்துஷ்ஷாபியீனும், விளக்கும் அறிவதின்பவுமில்லை
கழுதைகளைப்போலே யிரண்டோடுவார் கஅன்லஹுறஹும் ஹுமுறன்முஸ்
வீளம்பிறனிவைகுர்ஆனில் விளக்காம் கல்பினால் பார்பீர்களே [தன்பிற

முவுமின்காபிர்கள் இடையிலுள்ள முதலாமடையாளந்தொழுகை யென்றே
காமில் தருகுலனா சொன்னாரின்னங் கருதிஇரவெல்லாந்தொழுதழுதார்
பூமி கண்ணீரால் நனையுமட்டும் பெருதிந்த நிக்மத்தின்ஷுக்றுஞ்செய்தார்
ஷாமிலாகவே ஷபாஅத்துவில் சங்கை தொழுகையில் தொடர்வீர்களே

வெளியில் ஷரீஅத்தின்தொழுகையும் உள்ளில் தரீகத்தின்தொழுகையும் ஒருமித்தால் சிறப்பமான தொழுகையாகும் இவ்விதமான தொழுகையுள்ளவன் ளாஹிரில் ஆபிதாகவும் பாத்தினில் ஆரிபாகவுமிருப்பான் கல்புடையஹயாத்தைகொண்டு தரீகத்துடைய தொழுகை உண்டாகாவிட்டால் ஆரிபீன்களிடத்தில் நாகிசெனும்குறைதலான தொழுகையாம் இதின் விபரங்கள் (பயானுல் அஸ்றாறு) எனுங்கிதாபில் விரிவாய் வருகின்றது.

இனி ஷெய்த்தானின் நடப்பு பாதைகளாவது ஷறஹுக்குமாத்தமாகிய சொல், செயல், கிண்ணயங்களாயிருக்கும் யேனென்றால் முஹ்யித்தீன் அப்துல் காதரில் ஜீலானிய்யிறலியல்லாகு அன்கு சொல்வதை கவனித்து உறுதி பெறுங்கள் அவர்கள் சொல்வதாவது ஒரு நாள் கோணங்களெல்லாம் நிறம்பிய ஓர் ஒளிவு தோன்றி அதிலொரு ஸூரத்து வெளியாகி. அப்துல் காதிரேயென்று அழைத்து நான் உமது நாயனாகயிருக்கும் (தகலீபு) எனும் ஹலால் ஹறாமென்கிறயேற்பாட்டை உம்மைவிட்டும் வீழ்த்தாட்டிப்போட்டேன் ஆனதால் வணங்க நாடினால் வணங்கும் விட்டுவிட நாடினால் விட்டுவிடும் என்று சொன்னபோது லகுனத்து செய்யப்பட்டவனே நீ தளைமை அடைந்துபோவென்று சொன்னேன் உடனே அந்த ஒளிவு இருளாகவும் அந்த ஸூரத்து புகையாகவும் ஆகிவிட்டது பின்பு அப்துல் காதிரேஎன்று அழைத்து நீர் உமது நாயனின் அஹகாமுகளை நல்லவிதமாயறிந்ததாலும் உமது மகாமாத்துகளின் அஹவால்களை விளங்கினதாலும் என் மிறட்டுதலைவிட்டும் மீட்சை பெற்றீர் இதுபோலொத்த வார்த்தைகளைக்கொண்டு (70) ஆபிதுகளை வழி கெடுத்துப்போட்டேன் என்று சொல்லி மறைந்துவிட்டான் பின்பு குதுபு நாயகத்திடம் நீங்கள் அவன் ஷெய்த்தானென்று

எப்படி அறிந்தீர்களென்று கேட்டதற்கு றசூலுல்லாஹி சல்லல்லாகு அலை ஹிவசல்லம் அவர்களுடைய நாவினால் அல்லாகுத்தஆலா ஹறாமாக்கி வைத்ததை ஹலாலென்று சொல்வதுகொண்டு அறிந்தேனென்று சொல்லி அல்லாகுத்தஆலா தன் றசூல்மார்களின் நாவுகளினால் யாதொரு கருமத்தை ஹறாமாக்கிவைத்து திரும்ப அதை ரகசியத்தில் ஒருபோதும் ஒருவருக்கும் ஹலாலாக்கமாட்டானென்று சொன்னதாக அப்துல்வஹ்ஹாபு ஷஃறானிய்யிறலியல்லாகு அன்கு (யவாகீத்து) எனுங்கிதாபில் ஹிகாயத்து செய்திருக்கிறார்கள இன்னும் அவர்களைத்தொட்டும் இதுபோலொத்த ஹிகாயத்து (இன்சான்காமில்) எனுங்கிதாபிலும் வருகிறது. ஆனால் ஒன்றுமறியாத, உம்மி ஜனங்கள் தக்வா இல்லாமல் சில பாடல் படிப்புகளைகற்றுக்கொண்டு யேறுக்குமாறான அருத்தங்களை வைத்துக்கொண்டு மனதில் வந்ததுதான் மார்க்கமென்று எண்ணி நாங்கள் கல்பு தொளுகையிலிருக்கிறோம். ரகசிய குளிகுளிக்கிறோம் ஷரீஅத்தின் தொளுகையும் வெளிசங்கமான இந்த முளுக்கும் எங்கட்கு அவசியமில்லையென்று சொல்லி தொளுகையை விட்டு திரிவது நிர்ப்பாக்கியமே தவிர அவர்கட்கு ஒருபோதும் லாபத்தை கொடாது.

யேனென்றால் ஹ்சறத் குதுபு நாயகம் முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜீலானிய்யி றலியல்லாகு அன்கு அவர்கள் முஜாஹதாவெனுந்தெண்டிப்புடைய காலத்தின் துவக்கத்தில் பாழ்மனைகளில் சிலகாலம் தரிபடுகிறதும் சிலகாலம் தின்னாமலிருக்கிறதும் சிலகாலம் குடியாமலிருக்கிறதும் சிலகாலம் நித்திரை செய்யாமலுமிருக்கிறதும் வழமையாயிருந்தது அதனிடையில் கிஸ்றுவெனும் அரசனுடைய பாளான குளத்தில் குளிர் ரெம்பவும் கடினமான ஒரிரவில் நித்திரை செய்யும்போது கனவு கண்டதால் ஜுனுபாகிவிட்டது உடனே எழும்பி தண்ணீர் கரையில்வந்து குளித்தார்கள் பின்பு நித்திரை செய்ததிலும் முன்போலவே கனவுகண்டு குளித்தார்கள் இப்படியே 40 தடவை ஜுனுபாகி 40 தடவையும் குளித்தார்கள் அப்பால் இனிமேல் நித்திரை செய்தாலுமிப்படியே ஆகுமென பயந்து அக்குளத்திலிருக்கப்படாதென்று எண்ணி கோட்டையின் மதிலின்பேரில் உட்கார்ந்தார்களென்று (குலாஸதுல் மபாகிர்) எனுங்கிதாபில் வருகிறது இன்னமொரு சொல்லில் 60 விடுத்தங்குளித்தாகளென்றும் அன்னேரம் ஒரு வேஷ்டியைத்தவிர வேறு வேஷ்டி அவர்களிடமில்லையென்றும் வருகிறது.

பிறவிகனே இந்த நாயகமிவ்விதஞ்செய்திருப்பதால் நாமெவ்விதம் பேணுதலாக நடக்கவேணுமென யோசியாமல் மனதில் வந்ததை மார்க்கமெனக்கருதி தானுங்கெட்டு அ... வர்க... யுங் கெடுப்பது பெரும் கெடுதியாயிருக்கும்.

யெனென்றால் வாஜிர்பாத்தின் என்ற இரண்டுவித வணக்கங்களில் ஷரீஅத்துடைய வணக்கம் மிகவும் இலேசாக இருக்க அதைவிட்டுவிட்டு மிகவும் கஷ்டமான தரீகத்துடைய கல்பு தொழுகையை எடுத்துக்கொண்டேனென்று அந்த ஜனங்கள் சொல்வது எப்படிப்போலென்றால்

சம்புவே என்னபுத்தி ஜலந்தனில் மீனை நம்பி
வம்புறும் விடக்கைபோட்டு வானத்தை பார்ப்பதேனோ

என்ற வாக்கியம்போல் இரண்டு பாதையும் இளந்துவிடுவார்களென்பதில் சந்தேகமில்லை.

யெனென்றால் ஷரீஅத்தின அமல் நிறப்பமாகாமல் மக்ரிபா உண்டாகாது மக்ரிபா இல்லாமல் ஷரீஅத்து நிறப்பமாகாது என்று ஹதீதில் வந்து இருக்கிறது. இதற்கு உதாரணமாவது (ஹிகாயத்து) ஹசறத் ஸல்மான்யானுதெனரிய்யி றலியல்லாகு அன்கு அவர்களுடன் ஹசறத் ஷெய்பானுர்ராயிரலியல்லாகு அன்கு ஹஜ்ஜுக்கு போகும்போது வழியில் ஒரு பெரிய வேங்கைப்புலி குறுக்கிட்டதை ஹசறத்ஸல்மான்யான் கண்டு திடுக்கிட்டார்கள் அதை ஹச்ரத் ஷேய்பானுர்ராயி றலியல்லாகு அன்கு அறிந்து புலியின் செவியை பிடித்து முறுக்கினார்கள் புலியானது வாலையாட்டி அடிபணிந்து நின்றது அப்பொழுது அவர்கள் இதனால் என்பெயர் பிறபல்யபபடுமென்று பயபபடுகிறேன், இல்லாவிட்டால் நான் மக்கஞ்சேரும்வரை என் பரிவட்டத்தை அதின முதுகிலாக்கி அதை எனக்கு வாகனமாக்கி கொள்வேனென்று சொன்னார்கள் இவாகளிருக்கிற தலத்தில் ஒருநாள் (ஷாபிஇய்யி) இமாமவர்களும் அவர்களிஞ்சீடராகிய இமாம் அக்மதிப்னு ஹன்பல், றலியல்லாகு அன்ஹுமா இருவர்களுமாகப் போகும்போது இந்த ஷெய்பானிடத்தில் ஒரு மஸ்அலா கேட்டு அவர் சொல்லுகிற ஜவாபை பார்க்க நாடுகிறேனென்று இமாம் (அஹ்மது) சொன்னார்கள். அதற்கு இமாம்ஷாபியிய்யி றக்மஹுல்லா நீர் அவரிடத்தில் ஒன்றும் பேசவேண்டாமென்று சொல்ல அவர் உம்மி என்ற அறிவில்லாத மனிதராயிருக்க இவரை மனிதரெல்லாம் உயர்த்துகிறார்கள் அவரை மடக்கவேண்டுமென்று சொல்லி அவர்கள் அருகில் வந்து ஷெய்பாவே என்று அழைத்து ஒரு மனிதன் நான்கு றக் அத்து தொழும்போது நான்குஸஜதாவிலும் மறதி நேரிட்டால் அவனுக்கு என்ன வாஜிபாகுமென்று கேட்டதற்கு அவர்கள் உங்கள் மதுஹபின்படிக்கா அல்லது எங்கள் மதுஹபின் படிக்காவென்று கேட்க அதுவும் ரண்டு மதுஹபாகவா இருக்கிறது என்

நதற்கு ஆம் சூபியாக்களுடைய மதுஹபென்றும் லாஹிறை உடையவர்கள் மதுஹபென்றும் இரண்டுவிதமிருக்கிறதென்று சொல்லி உங்கள் மதுஹபின்படிக்கி அம்மனிதன் மூன்று றகஅத்து தொளுது மறதிக்காக ஸஜதா ஸக்வுஞ்செய்யவேணும் எங்கள் மதுஹபின்படிக்கு அவன் அவ்விதம் நிறவேற்றுகிறதுந்தவிர அவன் கல்பு மறதி உள்ளவனுயிருப்பதால் இனி அவன் கல்புமறதியில் மீளாதிருப்பதற்காக அவன் கல்பை வேதனை செய்து சிட்சிப்பதுவாஜிபென்று ஹஜரத்ஷெய்பான் சொன்னார்கள் அப்பால் ஒரு மனிதனுக்கு வருடத்தில் மிகுந்த நாள் கைதீவனம் போடாமல் காட்டில் மேய்கிற நாற்பது ஆடு உண்டாயிருந்து அவைகளின்பேரில் ஒரு வருவருடந்திகைந்தால் எவ்வளவு ஆடு சகாத்து கொடுப்பது வாஜிபு என்று இமாம் அக்மதுறஃமஹுல்லா கேட்டதற்கு உங்கள் மதுஹபில் ஒரு ஆடு ஸகாத்து கொடுப்பது வாஜிபு எங்கள் மதுஹபில் அவ்விதம் ஒரு ஆடு கொடுப்பதுந்தவிர தன் எஜமானிடத்தில் அடிமை யாதொன்றையும் தன் பொருளென்று உடையதாக்கிக் கொள்ளாதிருக்க வேண்டுமென்று ஹஸறது ஷெய்பான் றஃமஹுல்லா சொன்னதை இமாம் அக்மதுறக்மஹுல்லா கேட்டு திகிலடைந்து மதிமயங்கி நின்றார்கள் இவ்விதம் (ஷறஹுல் அக்யாயி, ஷறஹுல்ஹிகமில்முபவ்வபு) முதலான கிதாபுகளில் வருகிறது.

இன்னும் முஹியித்தீன் அப்துல் காதரில் ஜீலானிய்யிறலியல்லாகு அன்கு அபூபக்கரில் ஹம்மாமிய்யி என்கிற கனதி தங்கிய ஒலி ஒரு முர்ஷிதை பேணுததால் அவர்களின் விலாயத்தை உரித்து பக்தாதை விட்டுந்துரத்திவிட்டார்களென்றும் வந்திருக்கிறது பிறவிகளே ஒரு முர்ஷிதை விட்ட ஒலியின் நிலமை இதுவானுல் பர்லுகளை விட்டுவிட்டு பளுதாக திரிகிறவர்களுடைய நிலமையேதாயிருக்குமென்று யோசித்து காமில் ஒலியுல்லா அதபுமாலையில் சொல்வதையுமுணர்ந்து நடப்பீர்களாக.

## தொங்கல்.

ஆகாதசிலபாசிகாளுேர் அறிவானஞானரென்று சொல்லி
வாகானமார்க்கந்தன்னைவிட்டு மனிதர்தனையுங்கேடாக்குவார்கள்
அவர்களாவது இப்லிசுதன் அன்பாம்பயலாகுங்குப்பாலுரும்
தவனமாயவருடன் பகைப்பாய் தண்ணீர்சோறதில் கலந்திடாதே

கருநாடகந்தன்னில் சிலர் பொல்லாத கள்ளஹுருமிகளிருந்துகொண்டு
கருதிதொளுவோரை கலைக்குகிறார் காபிர்தனில்கெட்ட காபிர்களே

எல்லா மனிதருஞ்சரியெனவே ஈனரியம்புவார் நீ செப்புவாய்
பொல்லா காபிர்க்கு உன் மகளை பொருந்தி கலியாணஞ்செய்வா என்றே

இன்னங்கேள்ப்பாய் நீயவனுடனே எல்லாஞ்சரி என்று சொன்னபோது
உன்னுடபெண்ணை மணஞ்செய்யும்போல் உகப்பாம் மகளுடன் மணஞ்செ
நீயுந்தகப்பனுமொன்று ஆனுல் நெறியாந்தகப்பனுக்கான தாயை [ய்வாயோ
நாயே உனக்காமோ என்றுரைப்பாய் நசறுணியான ஞானியுடன்

எல்லாஞ்சரியானுல் யேதுக்கு உன் லிங்கந்தனை மறைத்தாய் சீலையால்
கல்லாதமூடா உன் அபத்தை ஹயாவற மூடாதிருக்கலாமோ [யை
உள்ளால் தொழுகிறேனென்றுரைக்கும் ஈனருடஞ்சொல்வாயுன்மங்கை
உள்ளால் சேர்ந்துகொண்டேனெனவே உன்னல்லால் சுகந்தீர்ந்திடுமோ

மனதால் சோறுதிண்டால் பசி தீருமோ மனதால் நெய்தாலும் பிடவையா
னைவாலுலகத்தையாளலாமோ நீரன்றி தாகந்தீர்ந்திடுமோ [மோ
துன்யாக் கருமத்திலிந்தபடி துணிவாயிருந்தால் தீன் கருமத்திலும்
இனிதாய் துணிவாக உறுப்பால் அமல்யேத்தமாய் வெளிபடச்செய்வாயே

அந்த கருமத்து கண்டாலுமாம் இலங்குமொளிவுகள் கண்டாலுமாம்
இந்த நஸறுணியான ஞானர் எரியில் விளுவார்கள் முனிவாகவே
இந்த எஹூதியரியம்பும் நபி இறையை தொழுதாரோ இல்லையோபார்
பந்தம்போல்வதனுடைய ஷெய்கு பக்ரு முஹியித்தீன் தொழுகிலையோ

தொழுகைதனைவிட்ட குப்பாறுடன் தூய்ய நபி பீஸபீல் வெட்டினர்
பழுதான பொல்லா ஞானியுடன் படைவெட்டுவோனால் வாய்வெட்டுமோ
மூஸ்லீந்தனை கெடுக்கும் ஞானரே முனிவாய் ஹலாக்காக்கு முதலவனே
குஷியாய் தினமஞ்சி அஞ்சுந்தொள குதாயா நீ துணைச்செய்வாய் ஆமீன்

பிறவிகளே வானம் பூமி சகலத்திலுமுள்ளவைகளின் ஆஸ்றுகளை யெல்லாம் பொதிந்த ரொம்ப அழகாகிய பதவியில் இன்சானை படைத்தேனென்றும் ஆலத்திலுள்ளவைகளுக்கெல்லாம் றஹமத்தாகிய றசூலாக முஹம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமை அனுப்பினேனென்றும் அவர்களுடைய உம்மத்துகள் எல்லா நபிமார்களுடைய உம்மத்துகளில் யேற்றமானவர்களென்றும் குறுஆனில் திருவுளம் பற்றி இருப்பதோடு எல்லா படைப்புகளின் வணக்கங்களையெல்லாம் தொழுகையில் சேகரமாகி அவர்கட்கு சொந்தமாக கொடுக்கப்பட்ட முக்ஜிசாவாகிய மிகுறாஜில் அதை பர்ளாக்கினதால் நபிகள் நாயகம் அதை குறித்து அனேக ஹதீதுகள் சொல்லி

யும் தங்கள் சகருத்துஹாலில் முத்திரைப்பதமான வசியத்தாக சொன்னது தொழுகையை பேணும்பழக்கேயல்லாது வேறில்லை. இன்னும்அல்லாகுத்தஆலா திருவுளமாயிருக்கிறான் நாம் நேர்பாதையை காண்பித்து சற்குணம் நல் நடத்தைகளைக்கொண்டு தெரிந்துகொண்ட ஸாலிஹீன்களான சில மனிதர்கள் அவர்கள்பேரில் ரஹ்மானுடைய குர்ஆன் ஆயத்துகளை ஓதப்படுமேயாகில் அவர்கள் கலித்து சாளாயப்பட்டு சஜ்தா செய்தவர்களாக அடித்து விழுந்து வழிப்பட்டு நடப்பார்கள் அவர்களுக்கு பின்னால் சிலர் பகரமாக வந்து தொழுகையை பழுதாக்கி சரீர இச்சையின் ஆசைப்பாடான கருமங்களை துயர்ந்து துன்யாவில் மூள்கி கையென்கிற நரகத்தை சந்திப்பார்களென்று அல்லாகுத்த ஆலா திருவுளமாயிருக்கிறான்.

இன்னும் பிற்காலத்தில் என்னுடைய உம்மத்துகள் பாசிகான ஆலிம் ஜாஹிலான ஆபிது இவருவர்களுடைய கையிலகப்பட்டு ஹலாக்காவார்களென்று நபிகள்பிரான் றசூலுல்லாகி சல்லல்லாகுஅலைகிவசல்லம் திருவுளமாயிருப்பதுபோல் இக்காலத்தில் சிலர் மனிதரூபமாய் சமைந்து இபுலீசின் செய்கையை அணைந்து வாயில் முஹூமுணுப்பும் வலதில் தஸ்பீஹூம் கையில் அசாவும் காலில் மோஸாவும் தலையைத்தாழ்த்தி தரையில் நடந்து மஸ்தான் மஷாயிகு என்று வெளியாக அதைக்கண்டு சில புத்தி குறைவான மனிதர்கள் மதிமயங்கி பொறிகலங்கி நிற்கும் நேரம் சில பிஷகுதலான பாடல்களையும் உரைகளையுஞ்சொல்லி சில ஆயாத்து அதீதுகள் இமாம்கள் ஆரிபுகளுடைய சொல்லை தங்கள் கருத்துப்போல் வெளிப்படுத்தி அகமிய தொழுகை அகமியநோம்பில் காரியமல்லாது இந்த வெளிரங்கமான ·தொழுகை நோம்புஷிர்க்கென்ற றிணையென்று போதிக்க. அந்த புத்தியில்லா மனிதர் அதை ஒப்புக்கொண்டு தாங்களும் மக்களும் துயர்ந்தவர்களும் முஸ்லிமென்கிற பெயரைமட்டும் வைத்துக்கொண்டு கெட்ட பாம்புக்கு நல்ல பாம்பென்றும் சிகப்பு தோம்புக்கு பச்சை வடமென்றும் (கருத்த ஆட்டிற்கு வெள்ளாடு என்றும் பெயர் கிடைத்ததுபோல் ஷம்ஷுத்தீன், பத்றுதீன், னூறுதீன், அக்மது ஹாமிது, முஹம்மது எனும் நாமத்தையும் தரித்துக்கொண்டு அப்பெயர்பெற்ற மாதாக்களின் நற்செலை இழந்து நபிகள் நாயகம் சகருத்தில் தொழுகைப்பற்றி செய்த வஸிய்யத்தையும் மறந்து மதிமயங்கி ஹலாக்காகிறார்கள் அவ்விதம் ஹலாக்காக்கிற சபபு இந்த தொழுகையின் அஸ்றாரெனும் மதுரங்கள் அந்த வளி கேடெனும் பிணி கொண்டவர் சிந்தையில் செல்லாததாலும் இன்னும் இதில் ஹக்குடைய தஜல்லி எனும் ஒளியை அப்பாவிக

ளென்னும் கூச்ச கண்ணர் எத்திக்கொள்ளாதாலும் அந்த தோசிகள் இந்த சோம்பிகளை கெடுத்து வாசை கொள்ளையடிக்கிறார்கள் ஆகையால் பிறவிக ளை முகிய்யத்தின் அப்துல்காதர் ஜீலானிய்யி றலியல்லாகு அவர்களுடைய சொற்படி செய்த்தானுடைய நடப்பு பாதையேதென் றுணர்ந்து அந்த தோசிகளுடைய ஹலாக்கைவிட்டும் தவிள்ந்துக் கொள்வதுவேண்டுமாயிருக்கும்.

யேனென்றால் (அஜ்ஜிலூபித்தௌபதி கப்லல் மௌத்தி அஜ்ஜிலூபில்ஸலாதி கப்லல்பௌத்தி) மௌத்துக்கு முன்னே தௌபாவைக் கொண்டு தீபரித்துக்கொள்ளுங்கள் தப்பிபோக முன்னே தொழுகையைகொண்டு விரைத்துகொள்ளுங்கள் என்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் நமக்கு நல்மாராயஞ்சொல்லி இருப்பதாலும் நாயள் மௌத்தெனும் வேங்கைக்கு லெக்காயிருப்பதாலும் நிச்சயமல்லாத அற்பதுன்யாவைவிட்டும் நீங்குவதற்காய் அந்த வேங்கையானது திடுகூறாய் வந்து குறுக்கிடுகிற நேரத்தில் கை சேதப்பட்டு தௌபா செய்வதில் யாதொரு பலனுமில்லாதத்தால் இப்போது வாய்த்த காலதனைத வீணாக போக்காமல்அதையே கொள்ளைவாழ் வென்றெடுத்து மேலேசொல்லிய கெட்ட பித் அத்து பாவ தோஷங்களை செய்வதை விட்டுந்தவிள்ந்து நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களையும் அவர்கள் ஆல்அஸ்ஹாபு அக்லுபைத்துகளை உகந்த வாலீஹான கூட்டத்தில் சேர்ந்து தொழுகை முதலிய நலவான அமல்களை செய்து கொள்வீர்களாக.

ஆகையால் அல்லாகுத்தஆலா எனக்கும் என் தாய் தந்தை பந்து ஜனங்களுக்கும் என் உஸ்தாதுமார்களுக்கும் இப்புஸ்தகம் வெளிவர பொருளுதவிசெய்த புண்யவாளர் அவர்கட்கும் இன்னும் இப்புஸ்தகத்தில் பிழை உண்டாயிருந்தால் அதை நேராக்கும் மேலாப்பறமாகிய உலமாக்களுக்கும் இதை பார்த்துணர்ந்து பலன் பெறும் முஸ்லீம் அனைவர்களுக்கும் நஸூஹாவென்கிற மனிதன் தௌபாசெய்து பலன் பெற்றதுபோல் பலன் பெறும்படி நல்லுதவி தந்து இக பரத்தின் சீதேவி தனத்தையும் தருவானாகவும் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

தொழுகையினுணுக்கம் முற்றிற்று.

முபஸ்ஸிலன்:

ஆதிவேதம் ஓதும் பெரியோர்களே சலாம் என்ற மெட்டு,

ஆதி அருளால் வந்துதித்த அபூஹனீபாவின்
நீதியான தகப்பர் தாபி தூல்புனனிய்யின் (1)
குடியிருக்குமவர்கள் கிரஹம் கூபா ராட்சியம்
நெடியோன் கௌபை கல்பில் கருதி ஒவ்வொருதினம் (2)
இரவு முழுதுந்தொழுது நின்று இறையை வணங்குவார்
சோதிறப்பின் சுகிர்தகலையை சுகித்துக்கொள்ளுவார் (3)
இந்த விதமாய் எந்த நாளும் வணங்கி வருகவே
சொந்தநகரின் ஆற்றில் குளிக்க வந்து பார்க்கவே (4)
நேர்மையான பழத்திலொன்று மிதந்து வருகவே
கூர்மையாக் கண்ட பழத்தை கையிலெடுக்கவே (5)
பசியின்கடிசால் ருசிகள் கொண்டு பாதி தின்கவே
புசித்த பின்னரவர்கள் கல்பிற் பயங்கள் தோற்றவே (6)
ஆஹ்அப்ஸோஸ் தின்ற பழத்தை என்னிடத்திலே
ஆகிறத்தில் கேட்டாலங்கு மிகவுந்தொல்லையே (7)
இந்த கையுங்காலும் நாளை சாட்சி சொல்லுமே
அந்த சமயம் இந்த பழங்கள் தின்மையாகுமே (8)
என்று எண்ணி பாதி பழத்தை கையிலெடுத்துமே
அன்று நடந்தார் மயில்களேழு பொருத்தங்கேட்கவே (9)
கொல்லை ஒன்றில் கிழவரொருவர் கூனிவிருக்கவே
கையிலிருந்த பாதி பழமும் மரத்துக்கிணங்கவே (10)
கிழவரிடத்தில் நெருங்கியவர்கள் பொருத்தங்கேட்கவே
கையிலிருந்த கோலை எடுத்து கிழவரடிக்கவே (11)
கேலி பண்ணவந்த வாலிபரென்று சொல்லியே
மேலும் அடிக்க கோலைக்கிழவரோங்கி நிற்கவே (12)
வந்த விபரம் யாவும் வாலிபர் சொல்லி முடிக்கவே
அந்த கிழவர் சொன்னாரிந்த மொழிகளாகவே (13)
கால் கை முடமுங்கண்கள் குருடுங் காதுஞ்செவிடுகள்
வாயும் ஊமை வல்லனாயன் விதித்த என்மகள் (14)

ஒருத்தி உண்டும் அவளை நீர் நிகாஹு செய்யவே
பொருந்திக்கொண்டால் தின்ற பழத்தை யொப்புக்கொள்ளுவேன்

கிழவர் மொழியை கேட்டதாபித்தங்கள் கல்புக்கே
யமனுனின் கடுசுதன்னை சொன்னார் தம்மிலே (16)

ஆகிரத்தின் அதாபு வெகு கடுசு கொடுசுகள்
இன்னிலத்தின் ஆதாபு மிக பொடுசு சிறுசுகள் (17)

இந்த கருத்தை மனதிலெண்ணி நல்லதெங்கவே
சொந்த பழத்தை கிழவர் பொருந்திகொண்டேனென்கவே

இறைவனருளாலந்தநேரம் நிகாஹு முடியவே
அறையில் போனபின்னரங்கு பெண்ணை பார்க்கவே

பதினாலாம் பக்கத்தின்னிலவி னொளிவுபோலவே
பெண்ணின் முகமும் பின்பு அறையும் யாவுமிலங்கவே (20)

பார்த்ததாபித் இவர்களெல்லையென்று திரும்பவே
சேர்ந்த மனிதர் யாவும் இவர்களென்று சொல்லவே (21)

அங்கு சென்று பெண்ணினிடத்தில் விஷயங்கேட்கவே
எந்தன் தந்தை சொன்னதெல்லாம்பொய்யுமல்லவே (22)

விபரந்தெரிந்த நாள் முதலாய் வேறுமனிதரை
கண்ணினாலே நோக்கினானும் பார்க்கவில்லையே (23)

நாயன்புர்கான் நாவினாலே ஓதுவதல்லால்
வேறு எந்த பேச்சை நானும் விரும்பவில்லையே (24)

காதினாலே எந்த பேச்சுங்கேட்கவில்லையே
கையினாலே யேதுவஸ்தும் எடுக்கவில்லையே (25)

எங்கும் போனாலே துபாவும் வந்துவிடுகுமோ
என்று எண்ணி இந்த அறையைவிட்டு நானுமே (26)

எங்கும் போகாதாகையாலே யாவரும் என்னை
கால்கை முடங்குருடி செவுடி ஊமை என்றுமே (27)

சொல்வதாலே எந்தந்தை தங்கள் சமூகமே
அந்த விதமாய் சொன்னாரென்று மனைவி சொல்லவே (28)

ஆதி அல்லா சாலிஹான பெண்ணை தந்தானே
என்று றகஅதைனி ஷுக்றுக் காகத்தொழுகவே (29)

அவர்கள் மனைவி பாத்திமாவு மந்த விதங்களாய்
றண்டுறகஅத்தை தொழுதார் ஷுக்றுக்காகவே (30)

147993
சென்னை-600 008

இந்த விதமாய் வளர்ந்த தாபித்தின் மகனிவர்
வந்த வழியை தெரிந்துணர்ந்த நமக்கிமாமிவர் (31)
ஈரிருபதாண்டின்காலம் ஒற்ற ஒலுவுடன்
ஐந்து வக்த்தைதொழுதுவந்த அஹ்லமுல் இமாம் (32)
ஒவ்வொரிரவில் உறுதிகொண்டு முன்னூறு றகஅத்தை
வழமையாக தொழுதுவரும் வேளை தன்னிலே (33)
வழியிலிவரை கண்ட பெண்ணி னொருத்தி ஒருத்தியை
பார்த்து இந்த இமாமுல் அஹ்லம் எந்த நாளுமே (34)
ஐனூறு றகஅத்தை தொழுவா ரென்று சொல்லவே
அந்த விதமாயெந்த நாளுந் தொழுது வருகவே (35)
கொஞ்ச நாட்கள் சென்ற பின்பு கண்ட ஒருவன் தான்
கவனமுடனே இந்த மனிதரெந்த நாளுமே (36)
ஆயிரம்றகஅத்தை தொழுவா ரென்று சொல்லவே
அந்தபடியே தொழுது வந்தா ரெந்த நாளுமே (37)
பின்பு அவரின்தில் மீதிலொருவ ரவரை நோக்கியே
தாங்களிரவில் தூங்கும் வழமை இல்லை என்றுமே (38)
மனிதர் யாவுஞ்சொல்ல கேட்டேனென்று சொல்லவே
இனிமேலிரவில் நானுந் தூங்கமாட்டேனென்றுமே (39)
சொன்ன சமயம் நின்றதில் மீ தெதற்கு என்றுமே
கேட்க உரைத்தார் யுஹிப்பூன அன்யுஹமதூ என்றுயத்தில்
நீங்கள் செய்யா அமலைக்கொண்டு புகளப்படுவதை
பிரியம் வைக்கும் மனிதரென்னின் அதாபை விட்டுமே
அச்சந்தீர்ந்தவர்களென்று எண்ணவேண்டாமே
என்று இறைவனுரைத்த பொருளையறிந்து நானுமே (42)
என்னிலில்லா விபத்தையவர்கள் சொல்ல நிதமுமே
ஏவ்விதஞ்சும்மாயிருக்கலாகும் என்று செப்பினர் (43)
கடங்கள் கொடுத்த வீட்டிங்கூரை நிழலில் நடந்தாலும்
தடங்கலான வட்டி என்று நீங்கிச்செல்லுவார் (44)
கொட்டு மேளந்தட்டி குழலும் ஊதக்கேட்டாலோ
இரண்டு காதில் விரலைவைத்து அடைத்துக்கொள்ளுவார்
கிட்டயிருக்கும் மனிதர் கேட்டால் கொட்டு குழல்களும்
தட்டுகெட்ட இப்லீசு சொல்லும் வாங்கு எங்குவார் (46)
இந்த விதமாய் வளர்ந்த நம்மன் இமாமின்மதுஹபை
நானுந்துயர்ந்துகொண்டேனென்று சொல்லிக்கொள்கிறீர்

கொட்டு வேடிக்கை தாசியாட்டங்குழலுங்கண்டாலோ
குருட்டு இப்லீசு கழுத்திலேறி சவாரியாகுவன் (48)
வட்டி என்றால் கிட்டவந்து கல்பு உகக்குரீர்
தொழுகையென்றால் தோஷிபோலே தவிழ்ந்துக்கொள்கிரீர்
மனிதர் முன்னில் பேசும்பேச்சு யாவும் ஞானமே
கழுத்தில் கையை ஓட்டி அறுப்பதெல்லாந்தாவியே (50)
சொல்கள் சுல்த்தான் சியல்கள் ஷெய்தான் என்ற சொல்லுபோல்
ஞானம்பேசி யோனிகண்டு அலைந்து மாய்கிரீர் (51)
ஷறஹின் அமலை அனுவளவுந் தவறி நடந்தவர்
மக்ரிபாவின்னுட்பந் தெரியா மோடராகுவார் (52)
ஷரியை கிரியை யோகம் ஞானம் என்ற நால்வகை
தொழுகை தன்னிலமைந்தவிதத்தை தெளிந்துபாருநீர்
குல்லயௌமின் குன்ஹூதாத்தை கூர்ந்து தொழுகவே
வல்லநாயன் உன்னுதவி நிதமும் தருகுவாய் (54)
ஸல்லிசல்லிம் அலாசெய்யி தின் முஹம்மதி
வ்ஆலின் வவிஹாபின்வதுபாகில்அஹ்மதி (55)

உபதேச கண்ணிகள் முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

## மரணத்தின் நினைப்பு மோக்ஷத்தின் அழைப்பு.

(மத்னவி இராகம்).

அல்ஹம்துலில்லா என்று இறயை புகள்ந்தனே
அஹ்மதுர்ர ஸூல் ஸலவாத் உரைத்தனே (1)
பஸ்அலூ அஹ்லத்திக்ரி என்றான் கத்தனே
அந்தபடியே கேட்டுணர்ந்தோ ரெத்தனை (2)
ஸீனுசென்றும் இல்மைதேடு சொன்னனே
தேடிதேடி தெளிவுபெத்தோ ரெத்தனை (3)
வஅலுஉபதேசம் இளந்தோ ரெத்தனை
குறுடு செவிடாய் போனவர்க ளெத்தனை (4)
ஹதீதுகேட்டு அமல்கள் செய்தோ ரெத்தனை
அதாபு இளந்து ஜெயமடைந்தோ ரெத்தனை (5)
கல்வி இல்லாகளுதையானோ ரெத்தனை
கல்விகொண்டு கல்புணர்ந்தோ ரெத்தனை (6)

தலைகள் மொட்டை கத்னா வெட்டி இருந்ததால்
நிகாஹு தாடி தலையில் தொப்பி அணைந்ததால் (7)

இஸ்லாமென்ற நாமங்கொண்டேனென்று நீ
எண்ணியிருந்தால் போதுமோ அதை உணரு நீ (8)

இஸ்லாமென்ற எழுத்தைபாரு எத்தனை
அட்சரங்கள் அமைத்துவைத்தான் கத்தனே (9)

அலிபு ஸீனு லா மலிபு மீ முடன்
ஐந்து ஹர்பு ஆனதுணரு கல்புடன் (10)

கலிமா தொழுகை ஸகாத்து நோம்பு ஹஜ்ஜுடன்
குல்லும் எடுப்பாய் இஸ்லாமென்ற இஸ்முடன் (11)

ஐந்து ஹர்புக்கானபர்லு அஞ்சுமே
இறுத்து வந்தால் அந்த நாமங்கிடைக்குமே (12)

இளிகள் காபிர்கலிமா சொல்லுறார்களே
கிருஸ்தவர்கள் தாடி வைக்கிறார்களே (13)

காசிதனக் கேகுறார்கள் காபிறும்
குளித்து விரதம் வைக்கிறார்கள் யாவரும் (14)

காட்டுகொட்டை செட்டி தலையும் மொட்டையே
நீதிகெட்ட காபிர்கத்னா வெட்டியே (15)

கூடி கலியாணஞ்செய்யுங்காபிர்கள்
நமக்குமவர்க்குமிடையிலுள்ள பர்குகள் (16)

தொழுகையல்லால் வேறுமுண்டோ சொல்லுங்கள்
தொழுகையில்லா தோஷியான பேருகள் (17)

தொழுகையானது தீனுக்குள்ள கம்பமே
அதைவிட்டவர்கள் நாரிலாவார் துன்பமே (18)

இதுவுமதேராகம்.

தொழுகை இழந்து துன்யா உகந்து இருந்தவர்
இந்த விதமாய் மருமைதனில் அளுகுவார் (19)

பெண்டுபிள்ளை என்ற எண்ணமெங்கையோ
பேணிவைத்த முதலுமனையுமெங்கையோ (20)

மூக்கிலணைந்த நத்து மூக்குத்தி எங்கயோ
மேலும் வேணுமென்ற நகைகளெங்கயோ (21)

கையிலணையுங் காப்பு கொலுசு எங்கயோ
காலிலணையுங் கடகத்தண்டை எங்கயோ (22)

பட்டு வஸ்திரம் பாவாடைகளெங்கையோ
பிடவை சட்டை சேலை ரவிக்கை எங்கையோ (23)

கையில் வளையல் கலகலென்ற தெங்கையோ
காதில் சிட்டி ஜிமிக்கி சொலித்த தெங்கையோ (24)
நாளை வேணுமென்ற எண்ணமெங்கையோ
நானுமிருந்த மெத்த மாளிகை எங்கையோ (25)
காதுகுலுங்க நகைகளிட்டு திரிந்தனே
மூக்கு குத்தி முகத்தை மினுக்கி இருந்தனே (26)
கையிலணிந்த மோதிரங்கள் எத்தனை
காணுருறைக்கி கையில் நெளிகாப் பூணந்தனே (27)
காலில் பீலி மிஞ்சி சங்கிலி மினிக்கியே
கடகம் பாசுரம் காட்டி திரிந்தேன் கனக்கவே (28)
பல்லை மினுக்கி பொடிகளிட்டு பகலையில்
பன்றிபோலே திரிந்தலைந்தேன் தெருக்களில் (29)
தங்க நகையுந் தாலி பீலி உடலிலே
அணைய்ந்து வணங்கமிளந்துபோனேன் பாழிலே (30)
மக்ஷதென்ற நாளுமுண்டு மென்றசொல்
மேதினியில் மறந்திருந்தேனந்த சொல் (31)
இந்த வேளை திட்டமுடனே என்னிலே
ஆனஅதாபறிந்துகொண்டேன் தன்னிலே (32)
காளைபோலே திண்டுதூறி இருந்தனே
நாளை படும்பாடு மறந்து போனனே (33)
நாளைவேணுமென்று முதலை பாழிலே
சேர்த்து வைத்துவிட்டு வந்தேன் வீணிலே (34)
எந்தந்துயரம் யாரிடத்தில் சொல்லுவேன்
வந்த விதியால் வெந்துதீரவேணுமே (35)
தோளி தோளி என்று தோளமை போட்டனே
தோளிதுயரம் நீக்கவில்லை ஹக்கனே (36)
அண்ணன் அக்கா என்று சொல்லியிருந்தனே
அவர்களெங்கே காணுமெந்தன் ஹக்கனே (37)
தம்பி தம்பி என்று சொல்லி இருந்தனே
தம்பி துயரம் நீக்கவில்லை ஹக்கனே (38)
மாமன் மாமி எந்தன் மனைவி என்றனே
மூவரெங்கே சொல்லு மெந்தன் ஹக்கனே (39)
சாச்ச சாச்சி மச்சி மதுனி என்றனே
சகலபேரும் இப்பமெங்கே ஹக்கனே (40)
தந்தை தாயும் தம்பமென்று இருந்தனே
துன்பம் நீக்க யாரும் இல்லை ஹக்கனே (41)

யாரும் உதவா வேளை இதுவென்றறிந்தனே
யாரிருந்தும் பலனுமில்லை ஹக்கனே (42)

ஷம்ஸ-ூவல்வயம்போலேகுர்பில் முடுகுதே
சிரசின் மூளை உருகி ஆறுயோடுதே (43)

கண்ணின் முழியுங்கல்பினீரல் கலங்குதே
கையுங்காலும் நடுங்கி பதறி சிதறுதே (44)

பூரான் பாம்பு வயற்றை கடித்து இழுக்குதே
ஆதிறப்பின் அதாபு மிகுதி ஆகுதே (45)

தந்தை தமைக்கை எந்தன் தோளன் மைந்தனும்
இந்த வருத்தம் யேந்துகொள்ளார் யாவரும் (46)

எந்தனுடலை தங்கம் போலே வளர்த்தனே
நரக நெருப்பில் வெந்து நானும் போறனே (47)

அழுது அழுது கண்ணுமுசமும் வீங்கியே
அழுத கண்ணீராறுபோலே ஓடுதே (48)

வட்டி வாங்கி தின்று நானுங்கொழுத்தனே
பிடித்திழுக்கும் பாம்பு தேள்கள் எத்தனை (49)

ஆடு மாடு தேடி வைத்தேன் அங்கை நான்
துன்பமுள்ள தோஷியானேன் இங்கை நான் (50)

பாலு பழமும் யடுக்கமெத்தை சுகித்து நான்
பாகமுடனே உளர்ந்திருந்தே னங்கே நான் (51)

கொழுத்த இறச்சி கோழிகறியுந் தின்று நான்
கோயில் காளைபோலே வளர்ந்து திரிந்தேன் நான் (52)

எறும்பு மூட்டை செள்ளு எந்தன் மேனியில்
யேது மிருந்தால் எடுத்துவிடுவேன் ஜல்தியில் (53)

கொழுத்த குதிரைபோலே எந்தன் முன்னிலே
கறுத்த தேளு கிட்டவந்து கொட்டுதே (54)

புவியும் வானம் பிழந்து பூபோல் சிவக்குதே
பிண்டம் ஒன்றாய் அண்டம்போலே யாகுதே (55)

இங்கே படும்பாடு தெரிந்தால் அங்கே நான்
நிமிஷம் ஒன்றும் வீணிலாக்கேன் திட்டந்தான் (56)

தாயுந்தந்தை மக்கள் மனைவி யாருமே
இங்கு எனக்கு உதவி செய்ய காணோமே (57)

தேளு நண்டு தேடி வந்து கொட்டுதே
ஓடிபோக இடங்கள் இல்லா மூட்டுதே (58)

அங்கும் இங்கும் திரிந்து எந்தன் வாணளை
கழுதை போலே ஆக்கிவிட்டேன் வீணிலே (59)

ஆஹ்அப்ஸோஸ் ஆருமில்லை ஆண்டவா
ஆனதும்பம் நீக்கி என்னை காக்குவாய் (60)

பெண்டுபிள்ளை என்ற எண்ணம் நாடிற்றே
இப்போதிரண்டு மென்னைவிட்டு ஓடிற்றே (61)

எந்தன் துயரம் யாவும் நீக்கி என்னைக்கார்
உன்னையல்லால் என்னைக்காப்பது வேறேயார் (62)

பாவி நான் படும்பாடு உனக்கே வெளிச்சமே
உன்னிடத்தில் கேட்க எனக்கு கூச்சமே (63)

எந்தனிருளை நீக்கி உந்தன் றஹ்மத்தை
கொடுத்து எனக்கு காண்பிவை உன் சமூகத்தை (64)

(இதுமதே ராகம்)

ஓடி ஓடி தேடினாலும் ஒட்டைச்சாண்
வயற்றின் பசியை அமத்ததின் பாய் உணருகாண் (65)

அன்னை தந்தை பெண்டு பிள்ளை இரவல்காண்
அருமை அண்ணன் மச்சான் மைந்தன் இரவல்காண்

ஓடி தேடிவைத்த சொத்து யாவுந்தான் (66)
படுத்தபாயும் உடுத்த துணியும் இரவல்காண்

இந்த உலகில் வாழ்வு நிலைத்த தெவர்க்குகாண்
உற்றுபார்த்தால் செற்றுபொகவேணுங்காண் (67)

கூட கோபுரம் மாடமாளிகை இரவல்காண்
கூடியிருந்து தின்றசோறும் இரவல்காண் (68)

கோரிமுடிக்கும் கூந்தல்மயிரும் இரவல்காண்
காட்டி குலுக்கும் தங்கநகையும் இரவல்காண் (69)

கையில் அணியும் மோதிரங்கள் இரவல்காண்
காலில் போடும் செருப்பு ஜூத்தா இரவல்காண் (70)

பெண்டு பிள்ளை பெரிது என்று எண்ணிதான்
பெரிய வீட்டின் அமலை மறக்காதே காண் (71)

சீவன் உள்ள மட்டுந்தின்பாய் சோறுகாண்
மாண்டு போனால் வாயில் விளுகும் மண்ணுதான் (72)

இண்டுதூறி போனவர்கள் கோடிகாண்
போயி திரும்ப வந்ததில்லை உணருகாண் (73)

மனைவியுடனே மகிள்ந்து பேசும் பேச்சுதான்
மற்றுமெல்லா இச்சையாவும் பிச்சைதான் (74)

போதும் போதும் போயிடுவாய் நீயுந்தான்
போகமுன் நீ குன்ஹூஃதாத்தை உணருகாண் (75)

ஆதம் அய்யூப் நபிகளெங்கே சொல்லுகாண்
உன்னை ஈன்ற தாயுஹவ்வா எங்கேகாண் (76)

மூசா ஈசாதேசமாண்ட சுலேயுமான்
யூசுபுயஃகூப் நாபிகளெங்கே சொல்லுகான் (77)

மன்னவந்தன் முஹம்மதென்றோ ரெங்கேகாண்
மற்றும் அன்பியாக்களெல்லாமெங்கேகாண் (78)

உந்தன் அன்னை தந்தை தமக்கை எங்கேகாண்
மாமி மச்சி மைந்தன் யாவுமெங்கேகாண் (79)

சிரித்திருந்த சுகங்களெங்கே சொல்லுகாண்
கொழுத்த இறைச்சி திண்ட உடலமெங்கேகாண் (80)

பாட்டி பாட்டன் பூட்டி பூட்டனெங்கேகாண்
வெஷ்யபா உத்பாவான தஷ்டர் எங்கேகாண் (81)

ரூஜரூஜா என்று சொன்னோரெங்கேகாண்
ரூணுவங்கள் செய்த காறூன் எங்கேகாண் (82)

ஆதி அல்லா நீதி சொல்லால் அருளினான்
குல்லுஷெய் இன்ஹாலிகுன் நீ உணருகாண் (83)

இதுவுமதேராகம்.

தினமும் ஐந்து விடுத்தம் பூமி கூவுதே
கவனமுடனே கேளு உந்தங்காதிலே (84)

எந்தன் முதுகில் நடந்து பாவஞ்செய்கிறாய்
எந்தன் வயத்தில் துன்பம் மிகுதம்படுகுவாய் (85)

சிரித்து களித்து சுகித்து ஹறாம் தின்கிறாய்
எந்தன் வயற்று புழுக்கள் திங்க பருக்கிறாய் (86)

பெருமையடித்து வெளிச்சந்தன்னில் நடக்கிறாய்
பின்பு சலித்து இருளுதன்னில் வருகுவாய் (87)

ஆஸ்தி பாஸ்தி தோஸ்துடனே நடக்கிறாய்
தனித்துவந்து திடுக்க நடுக்கம் ஆகுவாய் (88)

உந்தன் கல்பு குருடு பாய்ந்ததாகையால்
உனக்கு இந்த சொல்லு கேட்கவில்லையா (89)

சல்லி அலா செய்யிதின் முஹம்மதி
வஆலின்வ்வஸிஹாபிஹில்முமஜ்ஜதி (90)

மரணத்தின் நினைப்பு மோக்ஷத்தின் அழைப்பு முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

# வெற்றிலையின் நற்குணங்கள்.

பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கட்கென்றும் நபிசுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கட்கென்றும் கிலாபு சொல்லப்பட்டிருக்கிறது. இருவர்களிலொருவர்கட்கு செய்த்தான் வெற்றிலையை கொண்டுவந்து கொடுக்கும்போது அதன் தலையும் வாலையும் பிடித்துக்கொண்டு வந்து கொடுத்ததால் தலையாகிய காம்பையும் அதன் திடராகிய பெரிய நரம்புகளையும் அதன் வாலையும் நீக்கி நபியவர்கள் தின்றதால் இக்காலத்திலுமவ்விதமே சிலர் தின்று வருகிறார்கள் அவ்விதம் தின்கிறதில் அநேக உபயோகமுண்டு. இன்னம் வெற்றி உஷ்ணமென்றும் சீதள உஷ்ணமென்றும் சொல்லப்படுகிறது. வெற்றிலையை தின்கிறதால் வாயின் இறுங்குளையும் பல்லுகளையும் கெட்டியாக்கும் வாயின் வீச்சத்தை விலக்கும், வலத்தை சுத்தியாக்கும், பசியை உண்டாக்கும் தாதை பிலப்பிக்கும் தலையின் நீரையும் முகச்சுரப்பையும் மாற்றும் தேக குஷியை தரும் ஜடலத்தை உறப்பாக்கும் கோபத்தை நீக்கும் முகத்தில் பள பளப்பை கொடுக்கும் இதுவுமல்லாமல் வாய் வருத்தங்கட்கு நல்ல மருந்து என்று ஹுகமாக்கள் ஒத்துக்கூடி சொன்னதை இமாம் ரூவீ றலியல்லாகு அன்கு சொல்லி இருக்கிறார்கள் இன்னம் ரெத்தபோக்கு உள்ள வியாதிகட்கு உபயோகஞ்செய்யுமென்றும் வந்திருக்கிறது உறுப்புகளில் காயப்பட்டு வருகிற ரெத்தத்தை வெற்றிலைச்சாறு மாற்றிவைக்குமென்றும் இரைக்குடல், கல்பு, ஈரல் இவைகளையெல்லாம் கெட்டியாக்கும் அஸ்மரி என்ற கல்லை உடைக்கும் திரேக அசதியை மாற்றும் பாடம் புத்தி இவைகளை உண்டாக்கும் மறதியை குறைக்கும் மிகவும் தின்கிறதைக்கொண்டு நாவை தடிப்பாக்கும் ஒஜீபனத்தைக்குறைக்கும் உஷ்ணரோகிகட்கு தலைக்குத்தை உண்டாக்குமென்றும் இவைகளையெல்லாம் (அர்ஸகு) இமாம் அவர்கட்குடைய (தஸ்ஹீலுல்மனுபிகு) என்ற கிதாபிலும் அந்தாக்கி இமாம் அவர்கட்குடைய (ததுக்கிறத்து) என்ற கிதாபிலும்இபுனுஹஸ்லா இமாம் அவர்களுடைய (மின்ஹாஜுல்பயான்) என்ற கிதாபிலும் பைரூஸாபாதீ இமாம் அவர்களுடைய (காமூஸுல் முஹீது) இவைகளிலும் இவைபோன்ற சில கிதாபுகளில் நின்றும் தெரிந்தெடுக்கப்பட்டதாயிருக்கும்

சுண்ணாம்புடைய நற்குணங்களைப்பற்றி கிதாபுகளில் காணப்படவில்லை ஆயினும்வெற்றிலையுடன் சுண்ணாம்பைகூட்டி திங்கவேணுமென்று (ததுகிறத்து) என்ற கிதாபில் வருகிறது. இன்னும் சுண்ணாம்பு கூட்டாமல் தின்னால்வெற்றிலையினுடைய இன்பம் தெரியாதென்றபடியால் அது கூட்டிதான் தின்கவேணுமென்று இபுனுல் பைத்தாரி இமாம் அவர்களுடைய (முபுறதாத்து) எனுங்கிதாபில் வருகிறது சுண்ணாம்பை கலக்கி தெளித்தெடுத்த தண்ணீரால் அதிக குணமிருக்கிறதென்றுஞ் சொல்லப்படுகிறது

பாக்கு சீதள உஷ்ணம் பச்சை பாக்கு வாயில் வரும் வியாதிகட்கும் உஷ்ணமான வெட்டைகட்கும் உபயோகமாகும் பல்லு ஊண் நரம்பு இவைகளை உறப்பாக்கும் வியர்வையை முறிக்கும் அரைத்துகுடித்தாலும் திரேகத்தில் பூசினாலும் நோவுகள் குணமாகும் கண் வியாதிகட்கு இதைக்கொண்டு உபயோகமுண்டாகும் இவைகளை (ததுகிறத்து மின்ஹாஜுல்பயான், காமூஸு இதுகளில் நின்றுந்தெரிந்தெடுக்கப்பட்டதாயிருக்கும்.

---

47913

7A
627